விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram · Ria · WESTERN UNION WU
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-737)


சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 04 புதன்கிழமை (17.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 088

## பேருந்து - ரயில் மன்னாரில் விபத்து

### மாணவன் பலி; 24 பேர் படுகாயம்



*(மன்னார்)* தலைமன்னாரில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து, ரயில் கடவையில் ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் பாடசாலை மாணவன் ஒருவர் பலியானதுடன் 24 பேர் படுகாயமடைந்துள்ளனர். *(19ஆம் பக்கம் பார்க்க)*



### சர்வதேசத்திடம் நீதி கோரி

## யாழில் இன்று எழுச்சிப் பேரணி

(யாழ்ப்பாணம்)
தமிழ் இனத்தின் மீதான இன அழிப்புக்குச் சர்வதேச நீதி கோரி தமிழர் 19

### கொரோனா வைரஸுக்கு

## தடுப்பூசி ஏற்றிக்கொண்ட ஹோட்டல் ஊழியர் மரணம்

(கொழும்பு)
காலியில் கொரோனா தடுப்பூசி ஏற்றிய ஹோட்டல் ஊழியர் ஒருவர் உயிரி 19

## பயங்கரவாத சட்டத்தின்கீழ்

### அசாத் சாலி கைது

(கொழும்பு)
சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.
குற்றப்புலனாய் 19

# ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை

## 40 நாடுகள் கையெழுத்து

*(ஜெனிவா)*
இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் பேரவையால் கொண்டு வரப்படவுள்ள பிரேரணைக்கு 40 நாடுகள் தமது ஆதரவை வழங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜெனிவாவில் முன்னகர்த்தப்படும் குறித்த பிரேரணைக்கு 40 நாடுகள் கையெழுத்திட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
*(19ஆம் பக்கம் பார்க்க)*



கோப்புப் படம்

### இளம் குடும்பப் பெண்

## நுணாவிலில் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)
சாவகச்சேரி - நுணாவில் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் அவரது வீட்டில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.
தூக்கில் தொங்கி உயிருக்கு போரா 19

## கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் கோவில் பகுதியில்

### புத்தர் சிலை இருப்பதாக தெரிவித்து துப்புரவுப் பணிகள்

(கிளிநொச்சி)
உருத்திரபுரம் சிவன் கோவில் பகுதியில் புத்தர் சிலை இருப்பதாக தெரிவித்து துப்புரவுப் பணிகள் இடம்பெற்றுள்ளது.
கிளிநொச்சி உருத் 19

### கர்ப்பவதி, மாணவி உட்பட

## வடக்கில் நேற்று மூவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
கர்ப்பவதி பெண், 9 வயது பாடசாலை மாணவி உட்பட மூவருக்கு நேற்று வடக்கில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
யாழ் .போதனா வைத்தியசாலை, 19

## கொரோனா மேலும் இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 2 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரி 19

## சைக்கிளிலிருந்து கீழே விழுந்த யுவதி உயிரிழப்பு

### நாவாந்துறையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
துவிச்சக்கரவண்டியிலிருந்து கீழே விழுந்த யுவதி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.
இதில் சுன்னாகம் உடுவில் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியன் விமலினி (வயது-32) என்ற யுவதியே 19

## உரும்பிராயில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
உரும்பிராய் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 19

## வடக்கு - கிழக்கில் நடைபெறும் நில ஆக்கிரமிப்பு தொடர்பில்

### சர்வதேச மாநாடு

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களான வடக்கு - கிழக்கில் தீவிரம் அடைந்துள்ள நில அபகரிப்பு தொடர்பிலும் இதற்கெதிராக மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி. 19

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 38 வயது, லண்டனில் வசிக்கும் விசா உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. (C-1722)

077 174 9208
077 700 4347

## மணமகன் தேவை

யாழ். கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மெலிந்த அழகிய, வயது 43, விவாகரத் தான மணமகளுக்கு மணமகன் தேவை.

077 050 8238
077 700 4347 (C-1722)


# தென்னிலங்கையை சேர்ந்தவர் யாழில் கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு ஆதரவாக தென்னிலங்கையைச் சேர்ந்தவர் ஒருவர் யாழில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளார்.

கண்டியைச் சேர்ந்த டீமன் ஆனந்த என்பவரினால் நேற்றைய தினம் சுப்பிரமணியம் பூங்கா முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர், கடத்தி படுகொலை செய்யப்பட்டோருக்கு் என்ன நடந்தது என இந்த அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என தெரிவித்து யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? என்பது தொடர்பில் இந்த அரசாங்கம் பொறுப்புக்கூறவேண்டும் என வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டுவரும்நிலையில் அதற்கு ஆதரவாக கண்டியைச் சேர்ந்த டீமன் ஆனந்த என்பவர் யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்கா முன்றலில் கவனஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்(ம-03.33)


## காரைநகர் பல.நோ.கூ சங்கம் (வ-து) மீதி உறுதிப்படுத்தல்

கணக்காய்வு நிதியாண்டு
(01.09.2019-31.08.2020)

மேற்படி சங்கத்தின் கணக்காய்வு (01.09.2019-31.08.2020) நிதியாண்டிற்கு நடைபெறுவதனால் சங்கத்தின் கிராமிய வங்கி அங்கத்தவர் சேமம், அங்கத்தவர் அல்லாதோர் சேமம், நிலையான வைப்பு, மீதிகளினை அங்கத்தவர்கள் தமது கிராமிய வங்கி வைப்பு புத்தகத்துடன் 18.03.2021-05.04.2021 திகதிகளில் சமுகமளித்து உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-1716) கணக்காய்வாளர்கள்



## மணிவிழா காணும் நாயகனுக்கு சேவைநலன் பாராட்டு கவி



கலாநிதி
**சி. ஆனந்தராசா**

பூமலி பொலிவொடு பூசை புரிந்து
பொலிவுற ஆலயம் சிறந்து விளங்கும்
கோண்டாவில் பதியாம் தில்லைநாயகி
உறையும் திருவீதியில் குடிகொள்ளும்
நல்லதோர் மைந்தன்
சின்னத்தம்பி எனும் திருவாளராம்
பல மங்கையர் போற்றிடும்
பவளம் எனும் இனியவளும்
நல் குலத்தாரின் நல் உள்ளம் கொண்டு
அவதரித்த நாயகனாம் திருவாளர்
லயன் கலாநிதி **சி. ஆனந்தராசா** அவர்கள்
பல கலை கொண்டு வீறுநடை போடும்
பல்கலைக்கழகம் எனும் பணியிடத்தில்
பல மேதைகள் பயின்று பட்டம் பெற்று உயர்ந்த -
உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தில் சேவைதனை
புரிந்து இளைப்பாறும் வேளையிலும் சமூக
பற்றுதனை இடைவிடாது தொடர தில்லையம் பதியாளின்
துணையோடு ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய
வாழ்த்துகின்றோம்.

17.03.2021

வாழ்த்துவோர் :
**உயர் பட்டப் படிப்புக்கள் பீட உறவுகள்**
**யாழ். பல்கலைக்கழகம்**

(C-1719)



## மணிவிழாக் காணும் நாயகன்
## திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியேஸ்வரன்

(முன்னாள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் -
இன்நாள் புதுக்குடியிருப்பு கோட்டக்கல்விப் பணிப்பாளர்)

Best Wishes

### சேவை விபரம்

**முதல் நியமன திகதி : 1985.12.26**

**சேவைமுன் பயிற்சி - 01**
ஆசிரியர் - 1985.12.26 - 1986.01.16
**மு/முள்ளிவாய்க்கால் க. உ. வித்தியாலயம்**
ஆசிரியர் - 1986.01.17 - 1987.12.31
**மு/குமுழமுனை மகா வித்தியாலயம்**
ஆசிரியர், உப அதிபர் - 1988.01.01 - 1993.01.31
**மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம்**
ஆசிரியர், உப அதிபர் - 1993.02.01 - 1999.02.21
**மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம்**
பகுதி நேர ஆசிரியஆலோசகர்
1995.04.01 - 1996.07.23
**மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம்**
பதில் அதிபர் - 1997.09.22 - 1998.03.30
**மு/பாரதி மகா வித்தியாலயம்**
அதிபர் - 1999.02.22 - 2005.02.28
**மு/வள்ளிபுனம் மகா வித்தியாலயம்**
அதிபர் - 2005.03.01 - 2006.01.15
**மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி**
அதிபர் - 2006.01.16 - 2015.12.31
**கோட்டக்கல்வி அலுவலகம், புதுக்குடியிருப்பு**
(அதிபர்) இணைப்பு - 2016.01.01 - 2016.04.23
**கோட்டக்கல்வி அலுவலகம், புதுக்குடியிருப்பு**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
2016.04.24 - 2021.03.19



மணிவிழா நாயகனே வாழ்க
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம் வாழ்க
அணியெனகல்வி அழகுடன் பூத்திட
பணிசெய்த பகலவனே வாழ்க

(C-1710)

பாடசாலைச் சமூகம்
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி- புதுக்குடியிருப்பு



# VELANAI PRADESHIYA SABHA
## Request for EXPRESSION OF INTEREST
### For Recreational Activities for Tourist at Mandaitevu Eco Tourism.

1. The Chairman now invites eligible service providers to indicate their interest in providing the Recreational Activities for Tourist to implement at **ECO TOURISM at Mandaitevu**
2. Interested service providers must provide information indicating that they are qualified to perform the services (Broachers, description of similar assignments, experience in similar conditions, availability of appropriate skilled staffs etc). Service providers may attach documents to show their qualifications.
3. Interested Service Providers may obtain further information at the address given below from **17.03.2021 to 30.03.2021 between 9.00 am to 4.00 pm.**
   Address: **Chairman, Velanai Pradeshiya Sabha, Vangalavady, velanai, Jaffna.**
   Contact No: **021 221 1506, 021 221 1505, Fax No: 021 221 1506**
   Email: **velanaips@gmail.com**
4. A complete set of Expression of Interest (EOI) documents may be purchased by interested service providers on the submission of written application to the Velanai Pradeshiya Sabha, Vangalavady, velanai, Jaffna from 17.03.2021 until 30.03.2021 **from 9.00 am to 3.00 pm upon payments of a non-refundable fees of Rs. 1000/-. The method of payment should be by cash.**
5. Expression of Interest shall be delivered or sent by registered post to the above address on or **before 31.03.2021 at 2.00 pm.** Late EOI will be rejected. EOI will be opened soon after closing in the presence of the service providers/ representatives who choose to attend.
6. The **Chairman, Velanai Pradeshiya Sabha** reserves the right to accept or reject any EOI.
7. **Basic requirements.**
   - The service provider should ensure that he/ she should have a good business culture in Jaffna.
   - The service provider should ensure that their Tourism & boating activities and operation cannot affect the Jaffna's culture and traditions.
   - The service provider should ensure that they should have fully insurance arrangements for both boating assets and passengers.
   - The service provider should ensure that their boating activities should be feasible for environment (should be done with environmental friendly manner)
   - The service provider should keep the leisure area clean and beautiful.

**N.Karunakarakurumoorthy**
Chairman,
Divisional Procurement Committee,
Velanai Pradeshiya sabha,
Vangalavady, Velanai, Jaffna.
17.03.2021

(C-1720)

# தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதிவேண்டி

# இன்று நடைபெறும் பேரணியில் உணர்வுபூர்வமாக கலந்து கொள்வோம்

## அழைப்பு விடுக்கிறார் மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறவுள்ள போராட்டத் திற்கு வடக்கு-கிழக்கு மக்கள் உணர்வுபூர்மாகக் கலந்து கொண்டு போராட்டம் வெற்றி பெற ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டும் என யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.**



அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர் களின் ஏற்பாட்டில் யாழில் சுழற்சி முறையிலான போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பல்கலைக்கழக மாணவர் களினால் பல்வேறு தரப்பினரிடம் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு கோரப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் ஊடாக விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என்றும் தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களான தேசியம், தாயகம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை அங்கீகரிக்கும் வகையில் தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும்வகையில் இன்று புதன்கிழமை கிட்டுப்பூங்காவில் இருந்து நல்லூரில் உண்ணாவிரதம் முன்னெடுக்கப்பட்டு வரும் திடல் வரையில் ஒரு பேரணியை பல்கலைக் கழக மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

எனவே வடக்கு-கிழக்கு தமிழ் மக்களிடம் அன்போடும் உரிமையோடும் வேண்டுகோள் விடுக்கிறேன். இந்தப் போராட்டத்திற்கு உணர்வுபூர்மாக கலந்து கொண்டு இந்த போராட்டம் வெற்றி பெற ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டும் என அன்போடும் உரிமையோடும் வேண்டுகோள் விடுக்கிறேன் எனத் தெரிவித்தார். (நி-4-33)

## சர்வதேசத்திடம் நீதியை எதிர்பார்ப்பது இலங்கையைக் காட்டிக்கொடுக்கும் செயல்

### என்கிறார் வீரசேகர



(கொழும்பு)

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் நீதித்துறை சுயாதீனமாகவே இயங்குகின்றது. இங்கு என்ன பிரச்சினைகள் இடம்பெற்றாலும் அதற்கு உள்நாட்டு நீதித்துறை நீதியை வழங்கியே தீரும். அதைவிடுத்து சர்வதேசத்திடம் பேராயர் நீதியை எதிர்பார்ப்பது நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு ஒப்பானதாகும்."

இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் நீதியைப் பெற்றுத் தருவோம் என்று நாட்டு மக்களுக்கு அரசு உறுதியளித்திருந்தது. எனவே, அரசியல் நலன் கருதி குற்றவாளிகளைப் பாதுகாக்கும் விதத்தில் அரசு செயற்பட்டால் நாம் சர்வதேச நீதிமன்றத்தின் உதவியை நாட நேரிடும் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்" என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருந்த கருத்துக்கு அமைச்சர் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார். (நி-4)

## சர்வதேச நீதிகோரி வடக்கு-கிழக்கில் கவனயீர்ப்புப் போராட்டங்கள்


### பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரெழுச்சி இயக்கம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் இனத்தின் மீதான இனவழிப்புக்கு சர்வதேச நீதி கோரி தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டங்களிற்கு வலுச்சேர்க்கும் முகமாக வடக்கு-கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவிலிருந்து முற்பகல் 10 மணிக்கும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காந்தி பூங்காவிலிருந்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் நீதி மற்றும் உரிமைகளுக்கான இப் போராட்டங்களிற்கு வலுச்சேர்க்குமாறு மதத்தலைவர்கள், தமிழ்த் தேசியக் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரிடமும் கேட்டுக் கொள்கிறோம். (நி-4)

## சுழற்சி முறையிலான போராட்டம் தொடர்கிறது



(நல்லூர்)

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்மென வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் 17 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. (நி-4-33)


## றிசாத்திற்கு எதிராக கருத்துக்களை தெரிவிப்பதற்கு விமலுக்குத் தடை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக அமைச்சர் விமல் வீரவன்ச அவதூறு கருத்துக்களை வெளியிடுவதற்கு கொழும்பு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

றிசாத் பதியுதீனால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி குறித்த தடை உத்தரவு மார்ச் 31 ஆம் திகதிவரை அமுலில் இருக்கும் என்றும் கொழும்பு நீதிமன்றம் அறிவித்துள்ளது.





முஸ்லிம் தீவிரவாதம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பாக அமைச்சர் விமல் வீரவன்ச அண்மையில் தெரிவித்த கருத்திற்கு எதிராக றிசாத் பதியுதீன் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அத்தோடு தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டதாக தெரிவித்து 100 மில்லியன் ரூபாய் இழப்பீடு கோரி குறித்த மனுவை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணம் கே.சி.சி.சி.அணி முதல் வெற்றி



விக்ரம்-ராஜன்- கங்கு வெற்றிக் கிண்ணத் தொடரின் முதலாவது தகுதிகாண் போட்டி கடந்த 11 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதான த்தில் நடைபெற்றது.

போட்டியில் கே.சி.சி.சி. அணி விக்டோறியன்ஸ் அணியை ஒரு இலக்கினால் வெற்றி பெற்று முதலாவது வெற்றியைப் பதிவு செய்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கே.சி.சி.சி. அணி விக் டோறியன்ஸ் அணியை முத லில் துடுப்பெடுத்தாடப் பணித் தது. விக்டோறியன்ஸ் அணி 25.4 ஓவர்களில் சகல இலக்கு களையும் இழந்து 121 ஓட்ட ங்களைப் பெற்றது.பிரிசங்கர்-12, பிரசாத்-30, சங்கர் ஆட்ட மிழக்காது-21 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில்கே.சி.சி.சி அணி சார்பாக கஜானன்-04, சாம்ப வன்-02, தனோஜ், நிரூ சிகன், பிரதீசன் ஆகியோர் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றி னர்.பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய கே.சி.சி.சி. அணி28.1 ஓவர்களில் 9 இலக்குகளை இ ழந்து 125 ஓட்டங்களைப் பெற்ற னர். ஜெயரூபன்-30, சத்யன்-20, பிரதீஸ்-20 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் விக் டோறியன்ஸ் அணி சார்பாக பிரதீஸ்-03, கஜேந்திரன், கிரி தரன் தலா 02 இலக்கினைக் கைப்பற்றினர். (4)

# பீலேவின் சாதனையை முறியடித்த றொனால்டோ



உலகின் சிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவர் கிறிஸ் டியானோ றொனால்டோ. போர்த்துக்கல் நாட்டை சேர்ந்த இவர், இத்தாலியில் உள்ள ஜுவான்டஸ் கிளப்புக்காக தற் போது விளையாடி வருகிறார்.

இத்தாலி கிளப் கால்பந்து போட்டி ஒன்றில் ஜுவான்டஸ்-காக்லியானி அணிகள் மோதின. இதில் ஜுவான்டஸ் 3-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற் றது.

இந்த ஆட்டத்தில் றொனா ல்டோ 3 கோல்கள் அடித்து ஹாட்ரிக் சாதனை புரிந்தார். இதன் மூலம் அவர் அதிகாரப் பூர்வ போட்டிகளில் ஜாம்பவான் பீலே (பிரேசில்) சாதனையை முறியடித்தார்.

இந்த 3 கோல்கள் மூலம் றொனால்டோ 770 கோல்களை தொட்டார். அவர் பீலேவை முந்தினார். இந்த போட்டிக்கு முன்பு றொனால்டோ அவரை சமன் செய்து இருந்தார். தற் போது பீலேவை முந்தி சாதனை படைத்துள்ளார்.

றொனால்டோ கிளப் போட்டி களில் 668 கோல்களும், போர் த்துக்கல் அணிக்காக 102 கோல் களும் அடித்துள்ளார். கிளப் போட்டிகளில் ரியல் மாட்ரிட்டு க்காக 450 கோல்களும், மான் செஸ்டர் யுனைடெட்டுக்காக 118 கோல்களும், ஜுவான்டஸ் கிளப்புக்காக 96 கோல்களும், ஸ்போர்ட்டின் லிஸ்பன் அணி க்காக 5 கோல்களும் அடித் துள்ளார்.

தனது சாதனையை முறிய டித்த றொனால்டோவுக்கு பீலே வாழ்த்துக்களையும், பாராட் டுக்களையும் தெரிவித்தார். (4)

# இலங்கை அணிக்கு அபராதம்

மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இலங்கை வீரர்களுக்கு, 3வது ஒரு நாள் போட்டியின் சம்பளத்தில் 40 சதவீத அபராதமாக விதிக்கப்பட் டுள்ளது.


மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு ள்ள இலங்கை அணி 3 போட் டிகள் கொண்ட இருபது-20 தொடரை 2-1 என இழந்தது.

இதைதொடர்ந்து மேற்கிந் திய தீவுகள் உடனான 3 போட் டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 3-0 என வைட் வோஷ் ஆனது இலங்கை.

இந்நிலையில், Antigua-வில் நடந்த 3வது ஒருநாள் போட்டியில் மெதுவாக பந்து வீசியதற்காக இலங்கை வீரர் களின் போட்டி சம்பளத்தில் 40வீதம் அபராதம் விதிக்கப் பட்டு ள்ளது.

மேலும், புள்ளிகள் பட்டிய லில் இருந்து இலங்கை அணி க்கு இரண்டு புள்ளிகள் பறிக் கப்பட்டு அபராதம் விதிக்கப்பட் டுள்ளது.

அதுமட்டுமன்றி, மேற்கிந் திய தீவுகள் வீரர் நிக்கோலஸ் பூரனிடம் மோசமாக நடந்து கொண்டதற்காக இலங்கை ஓல்-ரவுண்டர் தனுஷ்க குண திலகவிற்கு ஐசிசி கண்டனம் தெரிவித்துள்ளது. (4)



இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரிட் பும்ரா, கிரிக்கெட் நிகழ்ச்சி தொகுப்பாளர் சஞ்சனா கணேசனை திருமணம் செய்து கொண்டார்.

# வீதிப் பாதுகாப்பு உலக கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்க ஜாம்பவான்கள் வெற்றி



வீதி பாதுகாப்பு உலக கிரிக் கெட் தொடரின், 15ஆவது லீக் போட்டியில் தென்னாபிரிக்கா ஜாம்பவான்கள் அணி 10 விக் கெட்டுகளால் அபார வெற்றி பெற்றது.

ராய்ப்பூர் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், தென்னாபிரி க்கா ஜாம்பவான்கள் அணியும் பங்களாதேஷ் ஜாம்பவான்கள் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற் சியில் வெற்றிபெற்ற தென் னாபிரிக்கா ஜாம்பவான்கள் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய பங்களாதேஷ் ஜாம்பவான்கள் அணி, நிர்ண யிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறை வில் 9 விக்கெட்டுகள் இழப் புக்கு 160 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அஹ மட் 39 ஓட்டங்களையும் சர்கார் 36 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில், நிட்னி மற்றும் சபாலாலா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் க்ருகர், சோண்டெக்கி மற்றும் டி பிரை யன் ஆகியோர் தலா 1 விக் கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 161 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்கா ஜாம்பவான் கள் அணி, 19.2 ஓவர்கள் நிறைவில் எவ்வித விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை கடந்தது.

இதனால் தென்னாபிரிக்கா அணி 10 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் சார் பாக, புட்டிக் ஆட்டமிழக்காது 82 ஓட்டங்களையும் வென் வைக் ஆட்டமிழக்காது 69 ஓட்டங் களையும் பெற்றுக்கொண்டார்.

இப்போட்டியின் ஆட்டநாய கனாக 54 பந்துகளில் 1 சிக்ஸர் 9 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 82 ஓட்டங் களை பெற்றுக்கொண்ட புட்டிக் தெரிவு செய்யப்பட்டார். (4)

# ஐ.நா.வரைபு ஆட்சி மாற்றத்துக்கானது

## தமிழர்களது நீதிக்கானதல்ல-உருத்திரகுமாரன்



(கொழும்பு)

**இலங்கையில் ஓர் ஆட்சி மாற்றத்தினை நோக்காகக் கொண்டே பிரித்தானியா தலைமையிலான கூட்டு நாடுகளால், ஐ.நா.மனித உரிமைச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைவு அமைந்துள்ளதென தெரிவித்துள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன், இது தமிழர்களது நீதிக்கானதல்ல எனத் தெரிவித்துள்ளார்.**

தீர்மான வரைபின் 9 ஆவது சரத்தினை சுட்டிக்காட்டி இது நீதி விசாரணையும் பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறையினை இலங்கையிடமே கையளிப்பதாக அமைகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டு தீர்மானம் வழங்கிய ஆணைக்கமைய, ஐ.நா.ஆணையாளர் அலுவலகம் மேற்கொண்ட விசாரணைகள், சாட்சியங்கள், ஆதாரத் திரட்டல்கள் ஊடாக அமைந்த மனித உரிமைகள் விசாரணை உயர்ஸ்தானிகர் அலுவலக OISL அறிக்கை, பின்னராக முன்வைக்கப்பட்ட கலப்பு நீதிமன்றம் யாவற்றையும் கடந்து, புதிய தீர்மான வரைபானது நிலைமைகளை மேலும் பின்னோக்கிக் கொண்டு செல்வதாக அமைந்துள்ளதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஐ.நாவில் நிறையவே ஆதாரங்கள், சாட்சிகள் உள்ள நிலையில், புதிதாக சாட்சியங்கள், ஆதாரங்களை திரட்டுவதற்கான பொறிமுறையினை மீளவும் ஐ.நா.ஆணையாளர் அலுவலகத்திடம் கொடுத்து காலத்தை இழுத்தடிக்கின்ற செயலாக இந்த தீர்மான வரைபு அமைவதோடு, நீதித்துறையினை நோக்கிய செயல்முறை தெளிவாக முன்வைக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு தீர்மானத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தினை நீக்க கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் இந்தத் தீர்மான வரைபானது, சர்வதேச நியமங்களின் அடிப்படையில் பயங்கரவாத தடைச் சட்டத்தினை மீளாய்வு செய்யுங்கள் என இலங்கை அரசிடம் கோருகின்றது.

தமிழ் அமைப்புக்களால் முன்வைக்கப்பட்ட சிற்சில விடயங்கள் மேலோட்டமாக பூச்சு வேலைகள் போல் உள்ளடக்கப்பட்டுள்ளதன்றி, பாதிக்கப்பட்ட மக்களது அடிப்படைக் கோரிக்கைகளைக் கவனத்தில் கொண்டுள்ளதாகத் தீர்மான வரைபு அமையவில்லை எனவும் உருத்திரகுமாரன் தெரிவித்தார். (நி-4)


ஓய்வு நிலையில் பணி நயந்து

Congratulations

வாழ்த்துகின்றோம்



திரு.

செபமாலை குருசுமுத்து

(Spl Trd.Maths,Bed,SLTS-1)

சேவை விபரம்

மு/ திருமுறிகண்டி இந்து வித்தியாலயம்
ஆசிரியர் :- 15.03.1990 - 31.12.1994
மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்
ஆசிரியர் : -01.09.1995 - 31.08.1998
மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயம்
ஆசிரியர் :- 01.09.1998 - 02.09.1999
கோட்டக்கல்வி அலுவலகம் -ஒட்டுசுட்டான் கணித பாட சேவைக்கால ஆலோசகர்
03.09.1999 - 28.01.2001
மு/மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம்
ஆசிரியர் :- 29.01.2001 - 01.01.2007
மு/ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலை
ஆசிரியர் :- 02.01.2007 - 02.01.2011
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்
ஆசிரியர் :- 03.01.2011 - 25.01.2021

முப்பது வருடங்கள் கல்வித்துறையில் மகத்தான பணியாற்றி 25.01.2021 அன்று ஓய்வு நிலை பெற்றுள்ள ஆசானைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்.
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் மானிப்பாய்.

(C-1715)



யாழ்ப்பாணம் மாநகர சபை
தனியார் பாதுகாப்புச் சேவைக்கான
கேள்விகள் கோரல் - 2021

யாழ்ப்பாணம் மாநகர சபையின் "தனியார் பாதுகாப்புச் சேவைக்கான" இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதிவாய்ந்த விண்ணப்பதாரரி டமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

இச்சேவையினை வழங்கக்கூடிய வழங்குநர்கள் 17.03.2021 - 31.03.2021 ஆம் திகதிவரை சபையின் வேலைப்பகுதியுடன் தொடர்பு கொண்டு கூறுவிலைப்படி வங்களினைப் பெற்றுப் பூர்த்தி செய்து எதிர்வரும் 01.04.2021 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு முன்னதாகப் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்வி திறக்கும் திகதி:- 01.04.2021
நேரம்:- முற்பகல் 11.00 மணி

(C-1717)

முதல்வர், மாநகர சபை,
யாழ்ப்பாணம்.



ஓய்வு நிலையில் பணிநயந்து வாழ்த்துகின்றோம்



திரு.வேலாயுதம் பாஸ்கரன்

((Spl Trd.Primary) SLTS-I)

சேவை விபரம்

மு/கொக்கிளாய் அ.த.க.பாடசாலை
ஆசிரியர்:-03.05.1990 - 31.12.1990
மு/கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலை
ஆசிரியர்:- 01.01.1991 - 31.12.1993
மு/செம்மலை மகா வித்தியாலயம்
ஆசிரியர்:- 01.01.1994 - 31.12.2002
மு/உடுப்புக்குளம் அ.த.க.பாடசாலை
ஆசிரியர்:- 01.01.2003 - 31.12.2003
நீர்/விஜயரட்ணம் இ.ம.கல்லூரி
ஆசிரியர்:- 27.04.2004 - 11.02.2016
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்
ஆசிரியர்:- 18.02.2016 - 15.03.2020

Congratulations

இருபத்தொன்பது வருடங்கள் கல்வித்துறையில் மகத்தான பணியாற்றி 15.03.2020 அன்று ஓய்வு நிலை பெற்றுள்ள ஆசானைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், மானிப்பாய்.

(C-1715)



Congratulations

ஓய்வு நிலையில் பணி நயந்து

வாழ்த்துகின்றோம்



திருமதி.

மேரி தியடோசியா
மரியதாஸ்

(Spl Trd.Primary,Bed,SLTS-1)

சேவை விபரம்

யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை
ஆசிரியர் :- 26.03.1990 - 07 05. 1994
கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்
ஆசிரியர் : -10.05.1996 - 11.05.1997
மன்/புனித சவேரியர் ஆண்கள் பாடசாலை
ஆசிரியர் :- 12.05.1997 - 23.05.2002
யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை
ஆசிரியர் :- 29.08.2002 - 01.01.2014
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்
ஆசிரியர் :- 02.01.2014 - 10.01.2021


முப்பது வருடங்கள் கல்வித்துறையில் மகத்தான பணியாற்றி 10.01.2021 அன்று ஓய்வு நிலை பெற்றுள்ள ஆசிரியரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்.
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் மானிப்பாய்.

(C-1715)

## பின்லா திட்டம் ஊடாக

# 25 இலட்சம் ரூபாய் பெறுமதியில் 20 பேருக்கு உதவிப் பொருட்கள்




(சாவகச்சேரி)

வேள்ட்விஷன் மற்றும் செவனத நிறுவனங்கள் இணைந்து பின்லா திட்டம் ஊடாக சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் தெரிவு செய்யப்பட்டுள்ள 20 பயனாளிகளுக்கு 25இலட்சம் ரூபாய் பெறுமதியிலான உதவிப் பொருட்களை நேற்று முன்தினம் சாவகச்சேரி நகரசபையில் வைத்து வழங்கினர்.

வேள்ட்விஷன் மற்றும் செவனத நிறுவனங்கள் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் நகரசபையுடன் இணைந்து முன்னெடுக்கும் கழிவு முகாமைத்துவத்தைப் பேணுவதற்கான பின்லா திட்டத்தில் வளங்களை (கழிவுகளை) சேகரிப்பவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்ட 20 பேருக்கே 25இலட்சம் ரூபாய் பெறுமதியான உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கடதாசிகளை தூளாக்கும் இயந்திரங்கள், கழிவுகளை சேகரிப்பதற்கான மூன்று சக்கரவண்டிகள், கழிவுகளை சேகரித்து வைப்பதற்கான கொட்டகைகள் அமைக்க தேவையான பொருட்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் ஆகியனவே இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த செயற்றிட்டம் ஊடாக நகரில் கழிவு முகாமைத்துவத்தை பேண முடிவதுடன் வறுமை நிலையில் காணப்படும் கழிவுகளை சேகரிப்பவர்களது வாழ்வாதாரத்தையும் உயர்த்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உதவிப்பொருட்கள் வழங்கும் நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் உஷா சுபலிங்கம், சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை இராமநாதன், நகரசபை செயலாளர் சு.சுபாஸ்கரன், நகரசபை உறுப்பினர்களான யோ.ஜெயக்குமார் மற்றும் ம.நடன தேவன், நகரசபை கணக்காளர் மற்றும் வேள்ட் விஷன் நிறுவன பிராந்திய முகாமையாளர் நிஷாந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். (5-4-30)

# இரத்ததான முகாம்

(நல்லூர்)

யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் இரத்ததான நிகழ்வு நாளை மறுதினம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல், மாணவர் நலன்புரிக் கட்டடத் தொகுதியில் நடைபெற வுள்ளது.

உயிர் காக்கும் உன்னத பணியில் சமூக ஆர்வலர்களை இணைந்து கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-33)

# தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் முழுநேரக் கற்கை நெறிகளை எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. அக்கற்கை நெறிகளான காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), இருசக்கர மற்றும் முச்சக்கரவண்டி திருத்துநர், மின்னிணைப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர் என்பனவாகும்.

இவ் அனைத்துக்கற்கை நெறிகளும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம், முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அல்லது வலந்தலைச் சந்தியிலுள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பதிவுகளை (021 222 7949/0212211793) என்ற தொலைபேசி இலக்கங்களினூடாக மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் கு. ரஞ்சன் அறிவித்துள்ளார். (5-4)

# வீட்டுத்திட்ட கொடுப்பனவுகளை முழுமையாக வழங்க வேண்டும்

## பிரதேசசபை உறுப்பினர் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மகிழங்கேணி கிராம மக்களுக்கான வீட்டுத் திட்டக் கொடுப்பனவை முழுமையாக வழங்க தென்மராட்சி பிரதேச செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிழங்கேணி கிராம மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் முழுமை பெறாமல் அரை குறையாக காணப்படுகின்றன.

அவர்களுக்கான வீட்டுத் திட்டக் கொடுப்பனவும் ஏழரை இலட்சத்திலிருந்து ஐந்தரை இலட்சம் ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

இதனால் அம்மக்கள் மேலும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறித்த வீட்டுத்திட்டத்தை வழங்கிய அரசாங்கம் மாறி இருக்கலாம். ஆனால் அரசு ஒன்று தான். எனவே பிரதேச செயலகம் வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளை முழுமையாக வழங்கி அவர்களின் கடன் சுமையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீட்டுத்திட்ட நிதி சீராக கிடைக்கப்பெறாமையால் மகிழங்கேணிமக்கள்பெரும்கடன்சுமைக்கு ஆளாகியிருப்பதாக அவர் தெரிவித்தார். (5-4-30)

# விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பர்ணம்)

எதிர்வரும் " உலக நீர் தின த்தை" முன்னிட்டு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு "நீரின்றி அமையாது உலகு" எனும் தொனிப்பொருளில் நடத்தும் பாடசாலைக் கல்வியை நிறைவுறுத்திய இளைஞர்களுக்கான வீதி நாடகப் போட்டி மற்றும் சுவரொட்டிப் போட்டி ஆகியவற்றிற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியானது எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை edu min.np. gov.lk எனும் இணையத்தள முகவரியிலோ அல்லது அமைச்சின் வரவேற்பு உத்தியோகத்தரிடமோ பெற்றுக்கொள்ள முடியும் எனவும் மேலதிக விபரங்களுக்கு 021 222 2203, 021 223 1343 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளமுடியும் என கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். (5-4)




# ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான துவிச்சக்கரவண்டிகள், சவள்கள், தண்ணீர் மோட்டர்கள் மற்றும் காஸ் சிலிண்டர்கள் என்பன எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

குறித்த பகிரங்க ஏலத்தில் பொருட்கள் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும்.

காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏலத்தில் பொருட்களை கொள்வனவு செய்யவருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவும்.

அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக் கொள்ளும் பொருட்களை அன்றைய தினம் உடனடியாக வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் என யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (5-4)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்க ளத் தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாயன்மார்க்கட்டு பட்டாணி ஆதி வைரவர் எருமேனி தர்மசாஸ்த மகா சந்நிதானத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் அருள் ஜோதி சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ ஜெகதீஸ்வரக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம் பெற வுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும். (5-4)

## பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

அண்மைய வாரங்களில் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவின் கீழ் இருக்கும் பிரதேசங்களில் கொரோனா நோய்த் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதனால் எதிர்வரும் 20 ஆம் திகதி இடம் பெறவிருந்த பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

இந்த முடிவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுரைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூட்டத்துக்கான புதிய திகதி விரைவில் அறிவிக்கப்படும் என நிர்வாகம் தெரிவித்துள்ளது. (5-8)

# அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 200 ஐ கடந்தது

(கொழும்பு)

மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 200.06 ரூபாயாக அதிகரித்துள்ளது.

நேற்று மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று வீதத்தின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள் விலை 195.28 ஆக உயர்ந்துள்ளதாகவும் அறிவிக் கப்பட்டுள்ளது. நேற்றைய நிலவரப்படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 198.96 ரூபாயாகவும் கொள் முதல் விலை 194.42 ரூபாயாகவும் ஆகவும் காணப்பட் டமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-4)

# வவுனியாவில் ஒரு வருடத்தில் பத்து யானைகள் உயிரிழப்பு


(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஒரு வருடத்தில் பத்து யானைகள் உயிரிழந்துள்ளதாக மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. வவுனியா மாவட்டத்தில் கடந்த ஒரு வருடத்தில் செட்டிகுளத்தில் 4 , நெடுங்கேணியில் 3 , வவுனியாவில் 3 யானைகளும் உயிரிழந்துள்ளன.

தற்போது வவுனியா மாவட்டத்தில் காடு அழிப்பு நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.இதனால்யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைகின்றதுடன் மக்களின் வாழ்வாதாரங்களையும் அழித்தொழிக்கும் நடவடிக்கையையும் மேற்கொள்கின்றது.

இதனால் மக்கள் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுடன் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(நி-4-299)



டொபிடோ மற்றும் கேஸ் டர்பய்னக் கருவி உட்பட (Gas Turbine Cut Modules) பல்வேறு பயிற்சிக் கருவிகளை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படையிடம் கையளித்தார். திருகோணமலைக்கு விஜயம் செய்த அவர், அங்குள்ள இலங்கை கடற்படையின் கடல்சார் கல்வி ஆய்வகத்தில் வைத்து கிழக்கு மாகாண கடற்படை நிறைவேற்று கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் ஜயரத்னவிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைத்தார்.

# காடழிப்பு பகுதிகளில் விசேட முகாம்கள்

(கொழும்பு)

காடழிப்பு இடம்பெறுவதாக அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் முகாம்களை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சோமாவதி வனம், கிண்ணியா மற்றும் வன்னி பகுதிகள் உள்ளிட்ட அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் முகாம்களை ஸ்தாபிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பல்வேறு தரப்பினரால் முன்னெடுக்கப்படும் காடழிப்பு நடவடிக்கைகளை தடுப்பதற்காக, இராணுவத்தின் ஒத்துழைப்பை பெறவுள்ளதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: பரணி கி.பா: 36 செவ் 1 சூரி 11 இல் உயரம்: 5'5" தகைமை/தொழில்: B.A,PGD, work-Development officer, D.S office. எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பார்க்கும் பெண் உள்நாடு மட்டும். தொ.இ: B/11609 | பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: சுவாதி கி.பா: 52 1/4 செவ் 6 சூரி 9 இல் உயரம்: 5'4" தகைமை/தொழில்: 2009 இலங்கை வெளியிட்டு பல்கலைக்கழகம் கணனி பொறியியலாளர். Work- software Programming எதிர்பார்ப்பு: வைத்தியர்,பொறியிலாளர், Accountant வெளிநாடு மட்டும், மணமகள் சைவபோசனம், அசைவமும் ஏற்கப்படும் தொ.இ: G/2312 |
| பிறப்பு: 1974 இந்து நட்சத்திரம்: கார்த்திகை கி.பா: செவ் 5 சூரி 4 இல் உயரம்: 162cm தகைமை/தொழில்: O/L, Work- இயந்திர இயக்குநர் எதிர்பார்ப்பு: திருமணமாகாத/தாரமிழந்த/விவாகரத்தான 1980-1985 பிறந்த பெண், பிள்ளைகள் இல்லாதிருத்தல் வேண்டும், மணமகன் எழுத்துடன் விவாகரத்து பெற்றவர். பிள்ளைகள் இல்லை. வெளிநாடும் விரும்பத்தக்கது. தொ.இ: B/11610 | பிறப்பு: 1978 இந்து நட்சத்திரம்: சதயம் கி.பா: 19 1/2 செவ் 2 சூரி 10 இல் உயரம்: 5'2" தகைமை/தொழில்: B.S.M.S & M.Sc, ஆயுர்வேத வைத்தியசாலை (அரச) எதிர்பார்ப்பு: ஆசிரியர், Program Assistant (GOV) தொ.இ: G/2365 |
| பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்: கார்த்திகை கி.பா: 44 செவ் சூரி 11 இல் உயரம்: 5'10" தகைமை/தொழில்: A/L தென்னங்காணி, வயல் உண்டு. எதிர்பார்ப்பு: படித்த நல்ல குணங்களுடைய மணமகள் தேவை. உள்நாடு மட்டும் தொ.இ: B/11611 | பிறப்பு: 1982 கிறிஸ்தவம் உயரம்: 5' தகைமை/தொழில்: O/L எதிர்பார்ப்பு: அரச தனியார் சுயதொழில். V,Ko, விஸ்வகுலம் முடிக்கலாம்.(NON RC க்குள் மட்டும் திருமணம் முடிக்கலாம் உள்நாடு மட்டும் தொ.இ: G/2376 |
| பிறப்பு: 1982 இந்து நட்சத்திரம்: மூலம் கி.பா: 7 3/4 செவ் 12 சூரி 6 இல் உயரம்: 5.8 தகைமை/தொழில்: A/L,Q.S, Work-Q.S எதிர்பார்ப்பு: அழகான படித்த பெண், அரச உத்தியோகம் பார்க்கும் பெண் தொ.இ: B/11612 | பிறப்பு: 1977 இந்து நட்சத்திரம்: பூரட்டாதி கி.பா: 26 1/2 செவ் 10 சூரி 12 இல் உயரம் 5'6" தகைமை/தொழில்: B.SC, ஆசிரியர் (அரச) எதிர்பார்ப்பு: உள்நாடு அரசாங்க தொழில் தொ.இ: G/2385 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# 7 இலட்சத்திற்கு அதிகமான கள்ள நோட்டுக்கள் சிக்கின

(கொழும்பு)

நிந்தவூரில் 7 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமான கள்ள நோட்டுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய அக்கரைப்பற்று பொலிஸார் மூவரையும் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதானவர்கள் நிந்தவூர் பகுதியில் உள்ள வீடொன்றில் தங்கி இருந்து இவ்வாறான சட்டவிரோத செயலில் ஈடுபட்டுள்ளனர்.

கைதாகிய குறித்த சந்தேக நபர்கள் தங்கிய வீட்டில் இருந்து பிறிண்டர் மற்றும் கணனி உள்ளிட்ட 5000 ரூபாய் நோட்டு பணம் அச்சிடும் தாள்கள், அச்சிடப்பட்ட பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன.

மேலும் இவ்வாறு கைதான நபர்கள் நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஒலுவில், பாலமுனை, கல்முனை ஆகிய பகுதியை சேர்ந்த சந்தேக நபர்களே இவ்வாறு கைதானவர்களாவர்.

இதில் கைதான சந்தேக நபர் ஒருவர் கடந்த 6 மாதங்களுக்கு முன்னரும் கள்ள நோட்டுக்களை அச்சடித்து விநியோகித்த குற்றச்சாட்டில் கைதாகி விடுதலையானவர் என விசாரணையில் தெரியவந்துள்ளது. (நி-4)


# கிருஷ்ணா அடகு சேவை

## பதிவு இல:- J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2020 ஆம் ஆண்டு 31.05.2020 இற்கு முன்னர் அடகு நகைகள் யாவற்றையும் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி (15.04.2021) இற்கு முன்னர் மீட்கவும்.

மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.04.2021 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு: 2020 ஆம் ஆண்டு 03 ஆம் மாதம் முதலாம் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

(C-1711)

உரிமையாளர்


இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் 021 490 0311

இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் 021 222 5046

# பெண்களுக்கான பாதுகாப்பும் கௌரவமும் சமுதாயத்தில் அருகிவருகிறது- சந்திரகுமார்

(கிளிநொச்சி)

**பெண்கள் பாதுகாப்பாகவும், கௌரவமாகவும் வாழ்கின்ற சூழல் அருகிவருகிறது எனவும், அண்மைய சம்பவங்கள் செய்திகள் அதனை புலப்படுத்துகின்றன என்றும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் எம்.பியுமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**



கடந்த ஞாயிற்றுக்கிழமை சமத்துவக் கட்சியின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட்டக்கச்சியில் மூன்று குழந்தைகளையும் கிணற்றில் தள்ளிவிட்டு தானும் தற்கொலைக்கு முயன்ற பெண், அம்பாள்குளத்தில் கர்ப்பிணியான பெண் கொலை செய்யப்பட்டமை, யாழ்ப்பாணத்தில் தனது பச்சிளம் குழந்தையை தாக்கிய தாய் என இச் சம்பவங்கள் அனைத்திற்கும் அப்பெண்களே காரணம் அல்ல. அவர்களை அந்நிலைக்கு கொண்டு சென்ற இச் சமூகமே காரணம்.

இச் சம்பவங்களுக்கு சமூகமாகிய நாங்களே பொறுப்பேற்க வேண்டும். அதிகரித்து வரும் சட்டவிரோத போதைப்பொருள் பாவனை, சட்டவிரோத மதுபானம் மற்றும் ஏனைய சட்டவிரோத செயற்பாடுகளால் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாவதுடன் அவர்களின் கௌரவம் கேள்விக்குள்ளாகிறது எனத் தெரிவித்தார்.

மேலும் யுத்தத்திற்கு பின்னர் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், போன்றவர்களின் முன்னேற்றத்திற்கு நாம் என்ன செய்துள்ளோம். எங்கள் சமூகத்தில் வாழ்கின்ற இவர்கள் தொடர்பில் நாம் என்ன ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் என்ற கேள்விகள் எழுகின்றன.

பெண்கள் நிம்மதியாக, கௌரவமாக, பாதுகாப்பாக, வாழ்வதற்குரிய சூழலை இல்லாது செய்வதற்கு இச்சமூகமே பொறுப்பேற்க வேண்டும்.

நாளுக்கு நாள் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக அதிகரித்து வருகின்ற நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து கூட்டுச்செயற்பாடாக நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். மாறாக பெண்கள் தினத்தில் மாத்திரமே பெண்கள் உரிமைகள், சமத்துவம் பற்றி பேசிவிட்டு கடந்து செல்கின்றவர்களாக நாம் இருக்கக்கூடாது. இருக்கவும் முடியாது எனவும் தெரிவித்தார். (5-4-350)

# பாலத்திற்கு அடிக்கல் நாட்டல்

(தருமபுரம்)

கிராமிய பாலங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இரத்தினபுரம், ஆனந்தபுரம் கிராமங்களை இணைக்கும் பாலத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் நேற்று இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர்கள், மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (5-4-100-316)

# சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான மருத்துவச் சான்றிதழ் பெறுவதில் தாமதம்

(குருமன்காடு)

சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான மருத்துவ சான்றிதழ் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக மக்கள் வழங்கிய முறைப்பாட்டையடுத்து, குறித்த இடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் விஜயம் மேற்கொண்டு அங்குள்ள பிரச்சினைகள் தொடர்பில் பொது மக்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் உள்ள தேசிய போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் இயங்கும் சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான மருத்துவ பரிசோதனை மற்றும் மருத்துவ சான்றிதழ் வழங்கும் நிலையத்திற்கு செல்வோர் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அசௌகரிய நிலை உள்ளதாகவும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து நேற்று முன்தினம் குறித்த மருத்துவ சான்றிதழ் வழங்கும் நிலையத்திற்கு சென்ற மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் தாமதம் ஏற்படுவதற்கான காரணம் தொடர்பில் கடமையில் இருந்த உத்தியோகத்தர்களிடம் கேட்டறிந்து கொண்டதுடன், அங்கு நின்ற மக்களிடம் குறித்த நிலையத்தில் எதிர்நோக்கும் அசௌகரியம் தொடர்பிலும் கேட்டறிந்தார்.

இதனையடுத்து குறித்த திணைக்களத்தின் செயற்பாடுகள் மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ளதால் குறித்த விடயம் தொடர்பில் சம்மந்தப்பட்ட அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்து உரிய முறையில் குறித்த திணைக்களம் இயங்க நடவடிக்கை எடுக்கப்படும் என இதன் போது மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, அரச திணைக்களங்களின் செயற்பாடுகளை கண்காணிக்க நேற்று முன்தினம் முதல் நாடு முழுவதும் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5-4-250)

# புத்தக விற்பனை நிலையம் தீயில் எரிந்து நாசம்



(நெளுக்குளம்)

வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தில் நேற்றுக் காலை புத்தக விற்பனை நிலையம் ஒன்று தீக்கிரையாகியுள்ளது.

நேற்று செட்டிகுளம் பிரதான வீதியிலுள்ள விற்பனை நிலையத்திலேயே திறப்பதற்கு முன்னரே குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்திற்கு மின் ஒழுக்கு காரணம் என்று ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. சம்பவ இடத்திற்கு சென்ற பொதுமக்கள் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

புத்தக நிலையத்திலிருந்த நிழல்பிரதி இயந்திரம், குளிர்சாதனப்பெட்டி மேலும் பல பெறுமதியான பொருட்களும் தீயில் எரிந்து நாசமடைந்துள்ளன. சம்பவ இடத்திற்குச் சென்ற மின்சார சபையினர் மற்றும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-4- 299)

# மாவட்ட செயலக புள்ளிவிபரக்கிளை அலுவலகம் திறந்து வைப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மாவட்ட புள்ளி விபரக் கிளையின் அலுவலகம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட புள்ளிவிபரவியலாளர் இ.இராஜசூரி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எம். யேசுறெஜினோல்ட், திட்டமிடல் பணிப்பாளர் எம்.கிருபாசுதன், உதவி மாவட்ட செயலாளர் லிசோ கேகிதா, கிளைத் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.(5-4-285)



தொழில்நுட்ப, கலை, கலாசார மற்றும் பெண்கள் மேம்பாட்டு தனியார் கல்வி அமையத்தினால் முன்னெடுக்கப்பட்ட இளைஞர் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஆங்கிலம் மற்றும் வாழ்க்கைத் தேர்ச்சி, தொழில்நுட்ப கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (படம்-தவசீலன்)

## இராசிபலன்

17.03.2021
பங்குனி 04, புதன்கிழமை,
சதுர்த்தி முன்னிரவு 10.50 மணிவரை
அச்சுவினி காலை 7.10 மணிவரை
சுபநேரம் 4.49-6.19 மணிவரை
இராகுகாலம் 12.19-1.49 மணிவரை
சந்திராஷ்டமம்: அத்தம்
சதுர்த்தி விரதம் வளவன்

**மேஷம்** — எதிர் பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள் கனவு பலிதமுண்டு,பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.

**ரிஷபம்** — சேமிப்பில் சிறிது கரையலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் ஏற்படலாம்,முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.

**மிதுனம்** — எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், தனவரவு திருப்திகரமாக அமையும்,வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** — குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், செய் தொழில் மேன்மையுண்டு.

**சிம்மம்** — ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சில் இனிமை ஏற்படும், வருங்காலத்திற்கான திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** — கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**துலாம்** — எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், களஸ்திர நன்மையுண்டு,தன்னம்பிக்கை துளிர் விடும் நாள்.

**விருச்சிகம்** — மனக் குழப்பம் அகலும்,வழிபாட்டில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கௌரவமான நாள்.

**தனுசு** — கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு,இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்,தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகள் வழியில் பெருமையுண்டு.

**மகரம்** — பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்** — முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும்,குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்,உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மீனம்** — சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், வருமானம் திருப்தி தரும், தொழிலை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், வாக்கு மேன்மையுண்டு, போசனசுகமுண்டு.

நரகத் துயரையும் அன்பால் ஆயத்தப்படுத்தலாம்

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்திற்கு தடை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

பண்டிகைகாலத்தை முன்னிட்டு மீண்டும் மாவட்டங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாக மருத்துவர் சமந்தா ஆனந்த தெரிவித்தார்.

GMOA
Government Medical Officers' Association

பண்டிகைக் காலங்களில் மற்ற மாவட்டங்களில் இருந்து கொழும்புக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்.

இது மீண்டும் கொழும்பில் பரவும் நோய்த்தொற்றை அதிகரிக்கச் செய்யும்.

பயணக் கட்டுப்பாடுகளை மீண்டும் அமுல்படுத்துவது முக்கியத்துவமாகும் என்று மருத்துவர் தெரிவித்தார். (நி-4)

# இளம் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு 'வீடும் வியாபார நிலையமும் வேலைத்திட்டம்'

(கொழும்பு)

உணவு விநியோக வலையமைப்பை விரிவாக்குவதற்காக சமுர்த்தி பயனாளிகள் குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட இளம் பெண் தொழில் முயற்சியாளர்கள் 25 ஆயிரம் பேரை இலக்காகக் கொண்டு அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் வீடும் வியாபார நிலையமும் அமைக்கும் வேலைத்திட்டத்தை ஏனைய நிரல் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களையும் இணைத்து மேற்கொள்வதற்கு நெடுஞ்சாலைகள் அமைச்சு முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறித்த வேலைத்திட்டத்திற்கு தேசிய ரீதியான வழிகாட்டல் பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை யொழிப்புக்கான செயலணி மூலமும் வேலைத்திட்ட நட வடிக்கைகள் சமுர்த்தி, வீட்டுப் பொருளாதாரம், நுண்நிதி சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

நாடளாவிய ரீதியில் இந் நிகழ்ச்சித்திட்டம் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதிப் புனரமைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் வீதிகளுடன் இணைந்து முன்மொழியப்பட்டுள்ள வீடும் வியாபார நிலையம் அமைக்கப்படவுள்ளதுடன், குறித்த வீடும் வியாபார நிலையமும் தேவைக்கேற்ப 200,300, 400 மற்றும் 500 சதுர அடிகளில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(நி-4)

# சதொச நிறுவனம் மூலம் துரித அரிசி விநியோகம்

(கொழும்பு)

மறைத்து வைக்கப்பட்டுள்ள நெல் தொகையை தேடி சுற்றிவளைப்புகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வர்த்தக மற்றும் விவசாய அமைச்சர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அவர் இந்த அறி வுறுத்தலை விடுத்துள்ளார்.

தற்போது நிலவும் சூழ்நிலையில் அரிசி இறக்குமதி செய்யாமலிருக்க இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பதிலாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் கையிருப்பிலுள்ள நெல்லை அரிசியாக மாற்றி சதொச வர்த்தக நிலையங்கள் ஊடாக பகிர்ந்தளிப்பதற்கு நேற்று முன்தினம் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் அரிசி விலையில் அதிகரிப்பு ஏற்படுமாயின் அரிசியை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.(நி-4)

# எந்தவொரு வெளிநாடுகளுக்கும் அரசாங்கம் அடிபணியவில்லை

## அமைச்சரவை பேச்சாளர்

(கொழும்பு)

இந்தியா அல்லது அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு மத்தியில் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கவில்லை என்று அமைச்சரவை பேச்சாளரும்,வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தற்பொழுது ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையில் கூட்டத் தொடர் நடைபெறுகின்றது. இந்த விடயத்திற்கும் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சரவை தீமானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

முன்னைய அரசாங்கத்தினால் மாகாண சபை தேர்தல் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட பிரேரணையின் போது அது காலவரையறை இன்றி ஒத்தி வைக்கப்பட்டது.

இதனால் மாகாண சபை தேர்தல் நடைபெறுவதில் ஏற்பட்ட சட்ட ரீதியிலான தடைகளை நீக்குவதற்காக அரசாங்கம் தற்பொழுது நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மாகாண சபை எமது அரசியல் யாப்பில் 13 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. (நி-4)




# நல்ல தலைவன்

இன்னொரு முனையைத் தன் இடுப்பில் கட்டிக் கொண்டது. எதிர்க்கரை மரத்தில் கொடியைக் கட்டுவதற்காகத் தாவியது.

ஐயோ! கொடியின் நீளம் குறைவாக உள்ளதே! நந்திரியா எதிர்க் கரையில் ஒரு மரக்கிளையைப் பிடித்தபடி தொங்கியது.

இப்படிக் கொடியையும் தன் உடலையும் வைத்து ஒரு பாலம் உருவாக்கியது. மற்ற குரங்குகளிடம், சீக்கிரம் வாருங்கள்! இந்தப் பாலத்தில் நடந்து, என் முதுகில் ஏறித் தப்பி விடுங்கள் என்றது. குரங்குகள் ஒவ்வொன்றாகப் பாலத்தில் நடந்து எதிர்க்கரையை அடைந்தன.

கடைசிக் குரங்கு தாவும் போது பளு தாங்காமல் கொடி அறுந்து விட்டது! நந்திரியா தீவின் கரையில் விழுந்தது.

மறைந்து நின்று இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அரசன் அதிர்ந்தான். நந்திரியா விழுந்த இடத்துக்கு விரைந்தான். அப்போது நந்திரியா உயிர் இழக்கும் நிலையில் இருந்தது.

உன் உயிரையும் பொருட்படுத்தாமல் உன் கூட்டத்தினரைக் காப்பாற்றி இருக்கிறாய்! மனிதர்களிலே கூடத் தன்னையே தியாகம் செய்து கொள்பவரை நான் பார்த்ததில்லை. உன் கடைசி விருப்பத்தைச் சொல். அதை நான் நிறைவேற்றுகிறேன் என்றான் அரசன்.




என் கூட்டத்தினரை ஒன்றும் செய்யாதீர்கள் என்று கூறியபடியே நந்திரியா உயிரை விட்டது.

அரசன் மாம்பழத் தீவைக் குரங்குகளுக்கே விட்டு விட்டுத் தன் படையுடன் திரும்பிச் சென்றான்.

(முற்றும்)

# மகாபாரதம்




துரியோதனன் எண்ணத்தைப் புரிந்து கொண்ட பீமன் “இப்போதே அஸ்தினாபுரம் சென்று துரியோதனனுடன் போர் புரிய வேண்டும் எனத் துடித்தான்.

“துரியோதனனின் சூழ்ச்சியை முறியடிப்போம் பொறுமையாய் இரு” என யுதிஷ்டிரர் கூறினார்.

பகலில் வேட்டையாடச் செல்வது போல மாளிகையைச் சுற்றி இரகசிய வழிகளை அடையாளம் கண்டு கொண்டார்கள் அவர்கள்.

விதுரர் பாண்டவர்கள் இருக்கும் இடத்திற்கு ஒருவனை அனுப்பினார். பகல் நேரத்தில் புரோச்சனனை அழைத்துக் கொண்டு காட்டுக்கு அவர்கள் செல்லும் போது அந்த ஆள் மாளிகையிலிருந்து வெளியேற சுரங்கம் ஒன்றை அமைத்தான்.

குந்தியும், பாண்டவர்களும் தூங்கும் போது இரவில் அரக்கு மாளிகையை தீயிட புரோச்சனன் எண்ணினான். குந்தியைக் காண ஒரு வேட்டுவச்சி தனது ஐந்து மகன்களுடன் வந்தாள். அவர்களுடன் விருந்து உண்டு அங்கேயே அன்றிரவு தங்கினாள் வேடுவச்சி.

பீமன் நள்ளிரவில் தாயையும், சகோதரர்களையும் சுரங்க வழியாக சென்று விடுமாறு கூறிவிட்டு மாளிகையின் அனைத்து பகுதிகளிலும் தீ வைத்து விட்டு தப்பினான். பாண்டவர்கள் குந்தியுடன் சுரங்கம் வழியே வெளியேறி ஒரு காட்டை அடைந்தனர்.

விதுரரால் அனுப்பப்பட்ட ஒரு படகோட்டி அவர்கள் கங்கையைக் கடக்க உதவினான். பாண்டவர்கள் முன்பின் தெரியாத ஒரு நாட்டை அடைந்தனர்.

இதற்கிடையே அரக்கு மாளிகை எரிந்து ஏழு சடலங்களையும் கண்டவர்கள் குந்தி, பாண்டவர்கள், புரோச்சனன் ஆகியோர் இறந்தனர் என எண்ணினர்.

பீஷ்மரும் இது கேட்டு பெரிதும் துக்கம் அடைந்தார். திருதராட்டிரனும் துயருற்றவன் போல நடித்தான். பாண்டவர்களுக்கு ஈமச் சடங்குகளை செய்து முடித்தனர்.

(தொடரும்)

# அஸ்ட்ராஜெனெகா கொவிட்-19 தடுப்பூசியை இடைநிறுத்த வேண்டாம்- உலக சுகாதார அமைப்பு வலியுறுத்து

(ஜெனிவா)

**அஸ்ட்ராஜெனெகா கொவிட்-19 தடுப்பூசி பயன்பாட்டை இடைநிறுத்த வேண்டாம் என உலக நாடுகளை உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியைப் போட்டுக்கொண்ட சிலருக்கு இரத்தம் உறைவு சிக்கல் ஏற்பட்டதாக வெளியான தகவல்களை அடுத்து பல ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இந்தத் தடுப்பூசி போடும் பணிகளை இடைநிறுத்தியுள்ளன.


இந்நிலையில் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிக்கும் இரத்த உறைவு சிக்கலுக்கும் இடையே எந்தத் தொடர்பும் இருப்பதற்கான ஆதாரங்கள் இல்லை என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

தடுப்பூசி வழங்கப்பட்ட பின்னர் இரத்த உறைவு ஏற்பட்டமை தொடர்பான சில சம்பவங்கள் ஐரோப்பாவில் பதிவாகியுள்ளன.

எனினும் பொதுவாக மக்களிடையே பதிவாகும் இரத்த உறைவு சம்பவங்களின் எண்ணிக்கையை விட இது அதிகமாக இல்லை என சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இங்கிலாந்தில் சுமார் 17 மில்லியன் மக்கள் இதுவரை அஸ்ட்ராஜெனெகா கொவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

எனினும் இரத்தம் உறைவு சம்பந்தமான 40 இற்கும் குறைவான சம்பவங்களே பதிவாகியுள்ளதாக அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-4)




## தேர்தல் கெடுபிடிகளால் சுற்றுலாப் பயணிகள் வருகை வீழ்ச்சி



(டில்லி)

தேர்தல் பறக்கும் படையினர் கெடுபிடியால் ஒகேனக்கல்லுக்கு சுற்றுலாப் பயணிகளின் வரத்து குறைந்து விட்டது.

தமிழக சுற்றுலாத் தளங்களில் முக்கிய இடமாக கருதப்படும் ஒனேக்கல் பகுதிக்கு கர்நாடகம், ஆந்திரம், கேரளம் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்தும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் நாள்தோறும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.


குறிப்பாக விடுமுறை தினங்களான சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் கட்டுக்கடங்காமல் இருக்கும்.

இதனிடையே, தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் 6ஆம் திகதி நடைபெற உள்ளதால் தற்போது தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ளன.

தமிழகத்தின் நுழைவு பகுதியாக உள்ள ஒகேனக்கல்லில் சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு சுற்றுலா பயணிகளின் வாகனங்கள் தேர்தல் பறக்கும் படையினர் மூலம் சோதனை செய்யப்பட்டு வருகிறது.

இதனால் பறக்கும் படையினர் கெடுபிடி ஆந்திரா, கேரளா, கர்நாடகா மற்றும் பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஒகேனக்கல்லுக்கு வருகை தரும் பயணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து காணப்பட்டது. (நி-4)

## மங்கோலியாவில் புழுதிப்புயல் 6 பேர் பலி, 80 பேர் மாயம்



(மங்கோலியா)

மங்கோலியாவில் கடுமையான புழுதிப் புயல் தாக்கியுள்ளது. புழுதிப் புயலில் சிக்கி ஒரு குழந்தை உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளதோடு, 80க்கும் மேற்பட்டவர்களைக் காணவில்லை என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னதாக திங்களன்று, மங்கோலியாவில் தோன்றிய புழுதிப்புயல் சீனாவின் தலைநகரைத் தாக்கியதால் பீஜிங்கில் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக ஸ்புட்னிக் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக நகரத்தில் பாரிய போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டுள்ளன. அனைத்து வெளிப்புற நடவடிக்கைகளும் இரத்து செய்யப்பட வேண்டும் என்று அதிகாரிகள் பரிந்துரைத்துள்ளனர். (நி-4)

## இந்தியா செல்லும் இங்கிலாந்து பிரதமர்



(லண்டன்)

பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன், எதிர் வரும் ஏப்ரல் மாத இறுதியில் இந்தியாவுக்கு செல்ல விருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலகின் புவிசார் அரசியல் மையம் எனும் இந்திய- பசுபிக் பிராந்தியத்தின் வாய்ப்புகளைவெளிக்கொண்டு வரவும் ஆசிய பொருளாதார சங்கத்தின் உறுப்பினராக பிரித்தானியா விண்ணப்பித்துள்ளது குறித்தும் அவரது பயணம் இருக்கும் என்று கூறப்படுகிறது.

மேலும், இந்தியா- பிரித்தானியா இடையேயான நட்புறவு அதிகரிக்கும் விதத்திலும், இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகம், வேலைவாய்ப்பு உள்ளிட்டவை மேம்படும் விதத்திலும் ஒப்பந்தங்கள் கையெமுத்திடப்படலாம் என்று தெரிகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறிய பிரெக்ஸிட் நடவடிக்கைக்குப் பிறகு பிரித்தானிய பிரதமரின் இந்தப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

முன்னதாக பிரதமர் போரிஸ் ஜோன்சன், குடியரசு தினவிழா நிகழ்வில் கலந்து கொள்ள இந்தியா செல்லவிருந்த நிலையில், அது கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது. (நி)

## சிரிய உள்நாட்டு போரின் ஒரு தசாப்தம்



(டமாஸ்கஸ்)

2011 மார்ச் 11 இல் ஜனாதிபதி பஷர் அல்-அசாத்தின் அரசாங்கத்திற்கு எதிராக அமைதியான போராட்டங்கள் வெடித்ததில் இருந்து சிரியாவில் உள்நாட்டுப்போர் ஆரம்பமாகிநேற்று முன்தினத்துடன் 10 ஆண்டுகள் ஆகின்றன.

ஒரு தசாப்தகால மோதல் மற்றும் நாடு பிளவடைந்துள்ள நிலையிலும் அல்-அசாத் உறுதியாக ஆட்சியில் இருக்கிறார்.

உள்நாட்டுப்போர் தசாப்தம் சிரியா மீது அளவிட முடியாத அழிவை ஏற்படுத்தியுள்ளது. மில்லியன்கணக்கானவர்கள் வறுமையில் தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் பெரும்பாலானோர் தங்கள் அடுத்த வேளை உணவைப் பாதுகாக்க பெரும் போராட்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (நி)

# சர்வதேச சமூகமே தமிழ் மக்களைக் காப்பாற்று

# அவுஸ்திரேலிய வாழ் தமிழ் சிறுவர்கள்

## கவனயீர்ப்புப் போராட்டம்

(மெல்போர்ன்)

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளுக்கு சர்வதேச நீதி கோரி அவுஸ்ரேலிய வாழ் ஈழத்தமிழ் சிறார்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

மேற்கு அவுஸ்திரேலிய நகரமான பேர்த்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் அவுஸ்திரேலிய வாழ் ஈழத் தமிழ் சிறார்கள் பங்கேற்றிருந்தனர்.

"எமது நிலம் எமக்கு வேண்டும், தமிழினப்படுகொலைக்கு நீதி வேண்டும், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்து, ஐ.நாவே! சர்வதேச சமூகமே! தமிழ் மக்களைக் காப்பாற்று" போன்ற கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை கைகளில் ஏந்தியவாறு குறித்த சிறுவர்கள் நீதி கோரும் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)




# மிச்செல் பச்லெட்டை அழைத்து வர நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை உயர்ஸ்தானிகரான மிச்செல் பச்லெட்டை இலங்கைக்கு அழைப்பது குறித்து இலங்கை பரிசீலித்து வருவதாக வெளியுறவு செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

இலங்கை தொடர்பில் ஐ.நரவில் அவர் வெளியிட்ட தீர்மானத்தை அடுத்து அவரை இலங்கைக்கு அழைப்பது தொடர்பில் இலங்கை கவனம் செலுத்தி வந்தது.

அந்த வகையில் அழைப்பிதழ் ஒன்றை அனுப்ப அரசாங்கம் பரிசீலித்து வருவதாக ஜெயநாத் கொலம்பகே அறிவித்தார்.

இவர் வருகையின் மூலம் நாட்டின் முன்னேற்றங்கள் குறித்து மதிப்பீட்டைப் பெற முடியும் என நம்பப்படுகின்றது.

இந்த விவகாரம் பரிசீலிக்கப்படுவதை உறுதிப்படுத்திய கொலம்பகே, எதுவும் இறுதி செய்யப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவை அமர்வின் முடிவில் முறையான அழைப்பை மிச்செல் பச்லெட்டுக்கு அனுப்ப வாய்ப்புள்ளது என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (நி-4)

# தாழங்குடாவில் விபத்து; இரு சிறுவர்கள் உட்பட மூவர் காயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாழங்குடாவில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இரு சிறுவர்கள் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

கல்முனையில் இருந்து மட்டக்களப்புக்கு வந்த கார் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் அமைக்கப்பட்ட மதகுடன் மோதுண்டு பாதையை விட்டு தடம்புரண்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது காரினை செலுத்திச் சென்றவரும் காரில் பயணம் செய்த இரண்டு சிறுவர்களும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கார் கடுமையாக சேதமடைந்துள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2256

### குமரன்

மாமியார் மருமக சண்டைல மனைவி பக்கமும் இல்லாம அம்மா பக்கமும் இல்லாம



பீரோ பக்கத்துல நிப்பவனே சிறந்த குடும்பஸ்தன்...!

### சியானி

மனைவி : கணவன் - மனைவி சண்டைன்னா நாலு சுவத்துக்குள்ளேதான் இருக்கனும்
கணவன் : அப்ப தப்பிச்சு ஓடக்கூட எனக்கு உரிமை இல்லையா?



### கம்சாயினி

தினமும் தூங்கி எழுந்ததும் யார் முகத்துல விழிப்பீங்க...?



ஆபிஸ்லியா....வீட்டிலியா...?

### மயூரா




### கேசவன்



தரகரே! பொண்ணு கறுப்பாயிருந்தாலும் சிவப்பாயிருந்தாலும் பரவாயில்லை, ஆனா பொண்ணு கண்டிப்பா ஸ்மார்ட் போன் வைச்சிருக்கனும்
தரகர் : ஏன் சேர்?
ஏன்னா ஸ்மார்ட் போன் வைச்சிருக்கிற பொண்ணு தான் குனிஞ்ச தலை நிமிராம போகும்.

### நித்தியா

கடவுள் ஒரு கதவை மூடினால் இன்னொரு கதவைத் திறப்பாராம்



எனக்கெல்லாம் கதவையும் மூடிட்டு சாவிய தொலைச்சிட்டாரு போல....!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## ஒருமித்த இலங்கைக்குள் சிறுபான்மையினருக்கான நீதியை உறுதி செய்வது அவசியம்

(கொழும்பு)

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் போரினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருமித்த இலங்கைக்குள் அவர்களுக்கான நீதியை உறுதி செய்வது அவசியமாகும். அதன் மூலம் தேசிய பாதுகாப்பும் நாட்டின் சுயாதீனத் தன்மையும் உறுதிப்படுத்தப்படும்.**



அதேபோன்று தோட்டத் தொழிலாளர்களையும் சிறுதோட்ட உரிமையாளர்களாக்கக் கூடிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

சிறுபான்மையின மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் அனைவரும் ஒன்றிணைந்து வாழக்கூடிய நாடொன்றைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் ஒருபோதும் சிங்கள பௌத்தத்திற்குத் துரோகமிழைக்கமாட்டோம். அதேவேளை பௌத்த தர்மத்தின் உள்ளடக்கத்தைத் தவறாக அர்த்தப்படுத்தி, அதன் மூலம் அடிப்படைவாத மற்றும் இனவாத செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் ஒருபோதும் அனுமதியளிக்க முடியாது.

மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் போரினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

போரினால் ஒட்டுமொத்த நாட்டுமக்களும் பாதிக்கப்பட்டிருந்தாலும் கூட வட,கிழக்கு மக்கள் அதனால் அதிகளவில் பாதிப்படைந்தார்கள்.

எனவே ஒருமித்த இலங்கைக்குள் அவர்களுக்கான நீதியை உறுதி செய்வது அவசியமாகும். அதன்மூலம் தேசிய பாதுகாப்பும் நாட்டின் சுயாதீனத்தன்மையும் உறுதிப்படுத்தப்படும்.

அதேபோன்று தோட்டத்தொழிலாளர்களையும் சிறுதோட்ட உரிமையாளர்களாக்கக் கூடிய வகையிலான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

சிறுபான்மையின மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் அனைவரும் ஒன்றிணைந்து வாழக்கூடிய நாடொன்றைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும் என்று குறிப்பிட்டார். (நி-4)

## தடுப்பூசியின் பக்க விளைவுகள் குறித்து ஆராய சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

கொரோனா தடுப்பூசியின் பக்கவிளைவுகள் தொடர்பாக ஆராய்வதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர், விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்ணாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

பக்கவிளைவுகள் ஏற்பட்டதால், கொவிஷீல்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் பாவனையை சில உலக நாடுகள் தற்போது தற்காலிகமாக நிறுத்தியுள்ளன.

இலங்கையிலும் கொவிஷீல்ட் தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்களில் இதுவரை 30 பேருக்கு குருதி உறைதல் ஏற்பட்டுள்ளதாக பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அண்மையில் தெரிவித்திருந்தது.

இந்த நிலையிலேயே தடுப்பூசியின் பக்க விளைவுகள் தொடர்பாக ஆராய்வதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

எவ்வாறிருப்பினும் இலங்கையில் தடுப்பூசி பாவனையை நிறுத்துவது தொடர்பாக இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என இராஜாங்க அமைச்சர், விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார். (நி-4)

## புர்காவிற்கு தடை விதிக்கும் விடயத்தில் அரசாங்கம் அவசரப்படாது - கெஹலிய

(கொழும்பு)

இலங்கையில் புர்காவிற்கு தடை விதிக்கும் விடயத்தில் அரசாங்கம் அவசரப்படாது என அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயம் தொடர்பாக தெரிவித்தார்.

புர்கா மற்றும் நிகாப் ஆகியவற்றை தடை செய்வது குறித்து தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாக தெரிவித்த அமைச்சர், புர்கா மற்றும் நிகாப்பிற்கு தடை விதிக்கும் விடயத்தில் அரசாங்கம் அவசரப்படாதென்றும் குறிப்பிட்டார்.

ஆலோசனை மற்றும் ஒருமித்த கருத்துக்குப் பின்னரே புர்கா மற்றும் நிகாப்பிற்கு அரசாங்கம் தடை விதிக்கும் எனவும் அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் புர்காவை தடை செய்வது தொடர்பான பிரேரணை நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மகிழ்ச்சி இருக்கும் இடம்!

வளமான மரங்கள் நிறைந்த காடு.

அங்கே ஒரு சாது இருந்தார்.

எப்போதும் ஒரு மரத்தடியிலே உட்கார்ந்திருப்பார். அவருடைய இருப்பிடமே அது தான்.

அவர் மூன்று கற்களை வைத்திருந்தார். செங்கல் மாதிரி இருக்கும். ஆனால் அதைவிட கொஞ்சம் பெரிதாக இருக்கும்!

எதற்கு அந்த மூன்று கற்களும் என்றால்... அது தான் அவருடைய படுக்கை.

தூங்கும்போது ஒரு கல்லை தலைக்கு கீழே வைத்துக்கொள்வார். இன்னொரு கல்லை இடுப்புக்கு கீழே வைத்துக்கொள்வார். மற்றொரு கல்லை காலுக்குக் கீழே வைத்துக்கொள்வார். உடம்பை ஒரு தகட்டாலே மூடிக்கொள்வார். அப்படியே தூங்கிவிடுவார்.

மழை பெய்கின்றது என வைத்துக் கொள்ளுங்கள்.

அவரது உடம்பு மூன்று கற்களின் மேலே இருக்கிறது.. அதனால் தண்ணீர் அடியிலே ஓடிச் சென்றுவிடும். உடம்பு நனையாது.. மேலே தகடு இருப்பதனால் மழையும் உடம்பில் படாது.

அவருடைய தூக்கமும் கெட்டுப் போக மாட்டாது. நிம்மதியாகத்தூங்குவார். பகலில் அந்த மூன்று கல்லையும் ஒன்று சேர்த்து ஒரு அடுப்பு மாதிரி வைத்து அதன் மேலே உட்கார்ந்து கொள்வார்.அதனால் அவரை பாம்பு பூச்சி எதுவும் தொந்தரவு செய்ய மாட்டாது. நகர்ந்து போய் விடும்.அவர் பாட்டிற்கு நிம்மதியாக இருப்பார்.

யாராவது எதையாவது கொண்டு வந்து கொடுத்தால் வாங்கி சாப்பிடுவார். அவ்வளவு தான்.

ஒரு நாள் அந்த நாட்டு அரசன் காட்டுக்கு வேட்டையாட வந்தான். அந்த வழியாக வந்த போது இந்த சாது படுத்திருப்பதைப் பார்த்தான். பரிதாபப்பட்டான்.

ஐயோ பாவம்,இவர் இப்படி இந்த கல்லின் மேலே உடம்பை வைத்துக் கொண்டு தூங்குகின்றாரே,என்ன பாடுபடுவார்.இவரை நமது அரண்மனைக்கு அழைத் துக் கொண்டு போய் சுகமாக -நிம்மதியாக அருப்பதற்கு வழி செய்து கொடுத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் , என்று நினைத்தான்.

அப்படி நினைத்துக் கொண்டே அரண்மனைக்கு வந்து விட்டான். அதற்குப் பின்பு ஒரு பல்லக்கையும் இரண்டு சேவகர்களையும் காட்டுக்கு அனுப்பி வைத்தான். அந்த சாதுவை மெதுவாக இங்கே அழைத்துக் கொண்டு வந்து விடுங்கள் என்று சொல்லி அனுப்பினான்.

இவர்கள் போய் அவரிடம் விபரத்தை சொன்னார்கள். எனக்கு எதற்கு அரண்மனை வாசம்? என்றார்.

இருந்தாலும் மன்னர் உத்தரவு ,நீங்கள் அவசியம் வரவேண்டும் என்றார்கள் அவர்கள்.

சரி என்று சொல்லி வேறு வழியில்லாமல் புறப்பட்டார். புறப்படும் போது மறக்காமல் அந்த மூன்று கல்லும்.... ஒரு தகடு அதையும் எடுத்து பல்லக்கிலே வைத்துக் கொண்டார்.

"எதற்கு இதையெல்லாம் எடுத்து வைக்கிறார்!" என்று அவர்கள் யோசனை செய்தார்கள். இருந்தாலும் அதைப்பற்றி ஒன்றும் கேட்கவில்லை. பேசாமல் அவரை அழைத்துக்கொண்டு அரண்மனைக்கு வந்துவிட்டார்.

அரசன் வரவேற்றான். அறுசுவை உணவு படைத்தான்.

அவர் உறங்குவதற்குத் தங்கக் கட்டில்... பட்டு மெத்தை.. எல்லாம் ஏற்பாடு செய்து வைத்திருந்தான்.

இங்கே படுத்து ஓய்வெடுங்கள் என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.

மறு நாள் காலையில் வந்து பார்க்கிறான். சாது படுத்திருக்கிறார் எப்படித் தெரியுமா? அந்தப் பட்டு மெத்தையின் மேலே மூன்று கல்லையும் வைத்து .... வழக்கம்போலவே படுத்திருந்தார். மேலே தகடு! அரசன் பார்த்துவிட்டு அதிர்ச்சியாகிவிட்டார்.

"என்ன சுவாமி இப்படி" என்றான்.

"சாது சொன்னார் எனக்குத் தேவையும் இல்லை. குறையும்இல்லை. எல்லா இடத்திலும் எனக்கு ஒரே மகிழ்ச்சி தான்!" என்றார்.

மகிழ்ச்சி என்பது தங்கக்கட்டிலிலோ பட்டு மெத்தையிலோ இல்லை.அது மனதிலே இருக்கின்ற ஒரு விடயம்.

உண்மையான மகிழ்ச்சிக்குவழி மனப்பக்குவம் என்றது அந்த அரசனுக்கு புரிந்ததாம்.

இந்தக் காலத்திலே ஒரு சாமியார். அவரைத் தேடி ஒரு சீடன் வந்தான்.

சுவாமி எனக்கு நிம்மதி வேண்டும். அதுக்கு என்ன வழி? என்று கேட்டான்.

சாமியார் நிமிர்ந்து பார்த்தார்.அதன் பிறகு சொன்னார். நீ ஏகப்பட்ட பேரிடம் கடன் வாங்கியிருக்கின்றாய் அதையெல்லாம் திருப்பிக் கொடுத்தால் தான் உனக்கு நிம்மதி கிடைக்கும் என்றார்.

இவனுக்கு ஆச்சரியம்.

அது எப்படி சாமி... அவ்வளவு சரியாக நான் கடன் வாங்கியதைக் கண்டு பிடித்தீர்கள் என்றான்.

உனக்குக் கடன் கொடுத்தே சாமியாராகப் போன எத்தனையோ பேரில் நானும் ஒருத்தன் தான்டா! என்னிடமே வந்து நிம்மதிக்கு வழி கேட்கின்றாயே? அது தான் வேதனை என்றார், அவர்.

09

# புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறைமையும் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் - 2018



**கலாநிதி க.தவலிங்கம்** ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

அரசியல் கட்சி மற்றும் சுயேட்சைக் குழுக்களுடைய பெயர் மற்றும் சின்னங்கள் காணப்படுகின்ற வாக்குப் பத்திரத்தில் புள்ளடியிடுதல் மாத்திரம் போதுமானது.

முன்னர் மூன்று வேட்பாளர்களுக்கு வாக்குகளை அளிப்பதற்கு வாக்காளர்களுக்கு காணப்பட்ட சந்தர்ப்பம் தற்போது இல்லாது போயுள்ளது. வாக்காளர்களுடைய முன்னுரிமைத் தெரிவிற்கான வாய்ப்பு இழக்கச் செய்யப்பட்டிருக்கின்ற வேளையிலே வேட்பாளர்களைத் தெரிவு செய்யவேண்டியது அரசியல் கட்சியின் செயலாளர் அல்லது சுயேட்சைக் குழுவின் தலைவர் ஆகும். இதன்படி தேர்தலுக்கு முந்தைய காலப்பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற பெயர் நியமனம் தீர்மானமிக்கதாகக் கருதப்படும்.

### பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்துதல்

பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவமானது முதற் தடவையாக உட்சேர்க்கப்பட்டுள்ளது. அது 25% ஆன அளவில் அல்லது ஒதுக்கீட்டு முறையிலாகும். இதேவேளையில் ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலும் நியமிக்கப்படவிருக்கின்ற உறுப்பினர் எண்ணிக்கையின் 1/4 பங்கு அதாவது 25% ஆன பெண் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அவ்வகையிலே இது அதிகரித்து வருகின்ற சவால்களையும், சமூக அரசியல் தேவைப்பாடுகளையும் முன்னிறுத்தி எடுக்கப்பட்ட ஒரு தீர்மானமாகும்.

அதன்படி புதிய முறையின் படி நடக்கும் உள்ளூராட்சிசபைத் தேர்தல்களிலே தெரிவு செய்யப்படக்கூடியமிகக் குறைந்தளவான பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,900 இற்கும் அதிகமானதாகும். பழையதேர்தல் முறைமையில் நடைபெற்ற இறுதி உள்ளூராட்சிசபைத் தேர்தலிலே அனைத்து உள்ளூராட்சிசபைகளிலும் தெரிவு செய்யப்பட்ட பெண்களுடைய மொத்த எண்ணிக்கை 86 ஆகும்.

> கலப்புத் தேர்தல் முறையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவமானது முதற் தடவையாக உட்சேர்க்கப்பட்டுள்ளது.ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலும் நியமிக்கப்படவிருக்கின்ற உறுப்பினர் எண்ணிக்கையின் 1/4 பங்கு அதாவது 25% ஆன பெண் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

### மக்களுக்கு நெருக்கமான மக்கள் பிரதிநிதிகளின் தெரிவு:

வட்டார அடிப்படையில் தெரிவு செய்யப்படுவதால் மக்களுக்கு மிகவும் நெருக்கமான அரசியல் அலகொன்று உருவாவதற்கான சந்தர்ப்பம் அமைந்துள்ளது. அதன்படி உறுப்பினர்கள் இல்லாதவட்டாரமொன்று இராத அதே வேளை இரண்டாவது முறையும் மக்களுடைய அபிமானத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டுமாக இருப்பின் பொறுப்புக்களைச் சரியாக நிறைவேற்ற வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. அத்துடன்,உறுப்பினர்களின் செயற்பாடுகளைமிகவும் நெருக்கமாக கண்காணிப்பதற்கான அவகாசம் வாக்காளர்களுக்குக் கிட்டியுள்ளது.

### · இளைஞர் ஒதுக்கீட்டின் இழப்பு

உள்ளூராட்சிசபை என்பது இளைய அரசியற் தலைவர்களைஉருவாக்குகின்ற. ஒரு விசேடமான இடமாகும். அதன்படிபழையதேர்தல் முறைமையில் பெயர் நியமனப் பத்திரத்தில் 40% ஆன ஒதுக்கீடு இளைஞர்களுக்கு வழங்கப்பட்டது. புதிய முறைமையில் இவ்வாய்ப்பு இழப்பிக்கச் செய்யப்பட்டுள்ளது.

ஆனால்,அதற்குப் பதிலாக உறுப்பினர் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. கொழும்பு மாநகரசபையில் முன்னர் காணப்பட்டஉறுப்பினர் எண்ணிக்கை 53 ஆகும். இம்முறைஅது 110 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், இம்முறைநிச்சயிக்கப்பட்டஉறுப்பினர் எண்ணிக்கையினை கொண்ட ஒரு உள்ளூராட்சிசபை ஒன்று இல்லை.

ஒருசபையின் தேர்தல் முடிவுகள் வெளிவந்த காலத்திற்குப் பின்னரும் கூட அச்சபைக்கு மேலதிகமான உறுப்பினர்களை வழங்குவதற்கானவாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இவ் உறுப்பினர் தெரிவு தொங்கு (மேலதிக உறுப்பினர்) (Overhang) ஆசனமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

### கலப்புமுறை தேர்தலுக்கு வேட்பு மனு சமர்ப்பித்தல்

இந்த முறை தேர்தலில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் 02 வேட்புமனு பட்டியல்களை சமர்ப்பிக்க வேண்டும். 1. முதலாவது வேட்பு மனுப் படிவம் - உள்ளூர் அதிகாரப் பிரதேசங்களில் வட்டாரத்துக்காக போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல். 2.மேலதிக வேட்பு மனு படிவம் - உள்ளூராட்சி அதிகார சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட வேண் டிய உறுப்பினர்கள் எண்ணிக்கையின் 40% உடன் 3 பேரைச் சேர்த்துவரும் எண்ணிக்கைக்கு சமனான வேட்பாளர்களின் பட்டியல். இந்த முதலாவது பட்டியலில் 10% மற்றும் மேலதிக பட்டியலின் 25% பெண் வேட்பாளர்களாக இருத்தல் வேண்டும்.

ஒவ்வோர் உள்ளூராட்சி அதிகார சபைக்கும் ஒவ்வொரு பட்டியலிலும் உள்ளடங்க வேண்டியமொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் ஆகக் குறைந்தபெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

> கலப்புதேர்தல் முறையின் கீழ் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் 02 வேட்புமனு பட்டியல்களை சமர்ப்பிக்க வேண்டும். 1. முதலாவது வேட்புமனுப் படிவம் - உள்ளூர் அதிகாரப் பிரதேசங்களில் வட்டாரத்துக்காக போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல். 2.மேலதிக வேட்புமனு படிவம் - உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்குத் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கையின் 40% உடன் 3 பேரைச் சேர்த்து வரும் எண்ணிக்கைக்கு சமனான வேட்பாளர்களின் பட்டியல்.

### உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்

### வட்டாரத்தின் உறுப்பினரைத் தெரிவு செய்தல்

குறித்த வட்டாரத்தின் அனைத்து வாக்குகளையும் எண்ணிய பின்னர் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்ற அரசியல் கட்சியின் அல்லது சுயேட்சை குழுவின் வேட்பாளர் குறித்த வட்டாரத்தின் உள்ளூராட்சி அதிகாரசபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவார். இத் தெரிவு முதலில் கம்பத்தைக் கடத்தல்முறைமையில் **(FPP)** ஆகும்.

### பல உறுப்பினர் வட்டாரத்தில் (Multimember ward) உறுப்பினரைத் தெரிவு செய்தல்

குறித்த பல உறுப்பினர் வட்டாரத்தின் அனைத்து வாக்குகளும் எண்ணப்பட்ட பின்னர் ஆகக்கூடியவாக்குகளைப் பெற்ற அரசியல் கட்சி அல்லது சுயேட்சை குழு வேட்பாளர்களில் இருவர் /மூவர் குறித்த வட்டாரத்தின் அந்த உள்ளூராட்சி அதிகார சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படுவர்.

இலங்கையில் உள்ள மொத்த உள்ளூராட்சி சபைகளிலும் 4917 வட்டாரங்கள் உள்ளன. அதில் 4746 தனி உறுப்பினர் வட்டாரங்களாகவும் 167 இரு உறுப்பினர்கள் வட்டாரங்களாகவும் 04 மூன்று உறுப்பினர்கள் வட்டாரங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த 4917 வட்டாரங்களிலிருந்து 5092 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

அதாவது தனி உறுப்பினர் வட்டாரங்களிலிருந்து 4746 உறுப்பினர்களும், இரு உறுப்பினர்கள் வட்டாரங்களிலிருந்து 334 உறுப்பினர்களும், மூன்று உறுப்பினர்கள் வட்டாரங்களிலிருந்து 12 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவார்கள். மூன்று உறுப்பினர்கள் வட்டாரங்கள் கொழும்பு மாநகர சபையில் மூன்றும் சம்மாந்துறை பிரதேசசபையில் ஒன்றும் காணப்படுகின்றன.

> இலங்கையில் உள்ள மொத்த உள்ளூராட்சி சபைகளிலும் 4917 வட்டாரங்கள் உள்ளன. அதில் 4746 தனி உறுப்பினர் வட்டாரங்களாகவும் 167 இரு உறுப்பினர்கள் வட்டாரங்களாகவும் 04 மூன்று உறுப்பினர்கள் வட்டாரங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த 4917 வட்டாரங்களிலிருந்து 5092 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். மூன்று உறுப்பினர்கள் வட்டாரங்கள் கொழும்பு மாநகரசபையில் மூன்றும் சம்மாந்துறை பிரதேச சபையில் ஒன்றும் காணப்படுகின்றன.

### விகிதாசார உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல்

குறித்த உள்ளூராட்சி அதிகார சபையின் மொத்த செல்லுபடியான வாக்குகளை அந்த உள்ளூராட்சி அதிகார சபைக்கு நியமிக்கப்பட வேண்டிய மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையினால் பிரித்து" தீர்மான எண்ணிக்கை" நிச்சயிக்கப்படும்.

குறித்த அரசியல் கட்சிபெற்றுக் கொண்ட வாக்குகளை அந்த மொத்த உறுப்பினர் எண்ணிக்கையினால் பிரித்து, அந்த அரசியல் கட்சிக்கு அந்த உள்ளூராட்சி அதிகாரசபையில் கிடைக்கவேண்டிய மொத்த உறுப்பினர் எண்ணிக்கை நிச்சயிக்கப்படும்.

அந்த மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் குறித்த அரசியல் கட்சி ஏற்கனவே வட்டாரங்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் தொகையை கழிக்கும் போது அந்த அரசியல் கட்சிக்குரிய அந்த உள்ளூராட்சி அதிகார சபைக்கான விகிதாசார முறையில் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

### பெண் உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்

தேர்தலில் கிடைத்த மொத்த செல்லுபடியான வாக்குகளில் 20%விடவும் குறைந்த வாக்குகளைப் பெற்ற மற்றும் மூன்று அல்லது அதற்கு குறைந்தளவு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட கட்சி அல்லது சுயேட்சைக் குழுக்கள் பெற்றுக் கொண்ட வாக்குகள் மொத்தச் செல்லுபடியான வாக்குகளில் கழிக்கப்படும்.

(தொடரும்)

# புத்தாண்டு காலத்தில் அரிசி விலை அதிகரிக்கப்படமாட்டாது



(கொழும்பு)

புத்தாண்டு காலத்தில் அரிசி பற்றாக்குறை நிலவாது என விவசாயத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட நெற்தொகைகளை சதொச மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பெற்றுக்கொடுக்கத் தீர்மானித்துள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மகிந்தா னந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அதன்படி, நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட 20,000 மெற்றிக் தொன் நெல் சதொச மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும்.

எதிர்வரும் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு நுகர்வோருக்குக் குறைந்த விலையில் அரிசி வழங்க இந்த நெல் தொகை பயன்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நடவடிக்கை காரணமாக உடனடியாக உயர்த்தப்பட்ட அரிசியின் விலை குறையும் எனவும் அதன்படி அரிசி இருப்புக்களைப் பாரிய அளவில் மறைத்து வைத்திருக்கும் வர்த்தகர்கள் தங்களிடமுள்ள நெற்தொகைகளைச் சந்தைக்கு வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனால் பண்டிகைக் காலங்களில் அரிசி விலையில் அதிகரிப்போ அல்லது அரிசிப் பற்றாக்குறையோ நிலவாது என அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## கடவுளை நெருங்க உதவும் மூச்சுப் பயிற்சி

(தொடர்ச்சி)

அதுபோல இடது நாசியில் மட்டும் சுவாசம் நடக்கும் சந்திர கலையின்போது மகா விஷ்ணுவை மனம் உருக வழிபாடு செய்தல் வேண்டும்.

அது மட்டுமின்றி லட்சுமி, அம்பாள் வழிபாடு சிறப்பான பலன்களைத் தரும். சந்திர கலை நடக்கும் போது ஒருவன் அம்பாளை வழிபட்டால் அவர் வேண்டும் வரங்களை எல்லாம் பெறலாம் என்பது ஐதீகமாகும்.

எனவே ஆலய வழிபாடு செய்யும் போது ஒவ்வொருவரும் தனது நாசியில் நடக்கும் சுவாசத்தைக் கவனிக்க வேண்டும். அதை விடுத்து பரபரப்பாக மனதை வைத்துக் கொண்டிருக்கக் கூடாது.

சிலருக்கு ஆலயத்துக்கு வெளியில் விடப்பட்ட செருப்பு மீதும் வாகனம் மீதம் நினைப்பு இருக்கும். சிலர் அன்றைய பிரச்சினை அல்லது நிகழ்வு பற்றி நினைத்து மனதைப் போட்டு குழப்பிக் கொண்டிருப்பார்கள்.

அதையெல்லாம் மனதில் இருந்து தூக்கி எறிந்து விட்டு சுவாசத்தில் கவனம் செலுத்த வேண்டும். சுவாசத்துக்கு ஏற்ப இறை உருவங்களை வழிபட வேண்டும்.

அப்படி சுவாசத்தைக் கவனித்துக் கொண்டு ஆலயப் பிரகாரங்களை உலா வந்தால் ஆலயத்தில் இருந்து வெளியில் வரும்போது ஆற்றல் பெற்ற மனிதனாக வெளியில் வர முடியும்.

சந்திரநாடி இட மூச்சை சூரியநாடி வலது மூச்சாக விடுவதற்கு இடது கையை பூமியில் ஊன்றி இடது முதுகை மாத்திரம் சுவரில் சாய்த்துக் கொண்டிருந்தால் மூச்சு சூரிய நாடியில் மாறும்.

இதேபோல் சந்திர நாடியில் மாற்ற வலது கை வலது முதுகைப் பயன்படுத்த வேண்டும். படுக்கையில் இருக்கும் போது மாற்ற விரும்பினால் வலது பக்கமாக ஓரம்சரிந்து படுத்து வலது கையைத் தலையின் கீழ் மடக்கி வைத்துக் கொண்டிருந்தால் மூச்சு சூரிய நாடியிலிருந்து சந்திர நாடிக்கு மாறும். இதேபோல் இடப்புறம் படுத்து இடக்கையை மடக்கிப் படுத்தால் சூரிய நாடி ஓடும்.

இந்தப் பயிற்சியைக் கடைப்பிடிப்பது முதலில் சற்று சிரமமாக இருந்தாலும் நாளடைவில் முறையான வழிபாட்டுக்கு வழி வகுக்கும். அது நீங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலிலும் வெற்றியைத் தேடி வரும்.

ஆலயத்தில் எல்லா சந்நிதிகளிலும் வழிபாடுகள் செய்து முடித்த பிறகு நாம் தவறாமல் தவம் இருந்து பழக வேண்டும்.

கோவில்களில் என்ன பிரச்சினைகளுக்காக நீங்கள் போகிறீர்களோ அந்த மன எண்ணக் கவனிப்பில் மூச்சை உரிய கிழமைகளில் உரியவாறு மாற்றிப் பயிற்சி செய்து அமர்ந்து தியானம் செய்தல் வேண்டும். அபிஷேகம், அர்ச்சனை, தீபம் ஏற்றுவது போன்றவற்றை விட தியானமே மிகவும் முக்கியமாகும்.

பழமையான ஆலயங்களில் தியானம் செய்ய தனி இடம் அமைத்திருந்தனர். இப்போதும் கூட திருவேற்காடு, வட பழனி ஆலயங்களில் தியானம் செய்ய இட வசதி உள்ளது.

ஆலயத்தில் தியானம் செய்ய வெட்கப்படாதீர்கள். தியானம் இருந்தால் இறை சக்தி பெற்று திருப்தியான வாழ்வைப் பெற முடியும்.

இப்படி சுவாசக் கவனிப்புடன் செயற்பட்டால் உங்களது ஒவ்வொரு செயற்பாடும் கட்டாயம் வெற்றி பெறும்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## 6 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா செய்கை அழிப்பு



(அம்பாறை)

அம்பாறை பக்மிடியாவ பகுதியில் 6 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா செய்கை கிழக்கு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் கீழ் உள்ள இராணுவத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை 14 ஆம் திகதி சோதனையிடப்பட்டது.

கஞ்சாச் செய்கை குறித்து கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய பொலிஸாருடன் இணைந்து இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)

## மீன் தொட்டியில் விழுந்து குழந்தை பலி

(கொழும்பு)

வீட்டில் இருந்த மீன் தொட்டியில் விழுந்து குழந்தையொன்று உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.35 மணியளவில் இந்த சம்பவம் இடமபெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிரியாகம, கஹல்ல, ஆதியாகல பிரதேசத்தை சேர்ந்த ஒரு வயதுடைய குழந்தையொன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது. சம்பவம் தொடர்பில் கல்கிரியாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 220 | 150 | 250 |
| தக்காளி | 120 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 50 |
| கோவா | 100 | 120 | 140 | 150 |
| கரட் | 160 | 200 | 200 | 200 |
| பூசணி | 80 | 90 | 60 | 80 |
| புடோல் | 140 | 120 | 120 | 120 |
| வாழைக்காய் | 50 | 70 | 50 | 100 |
| சின்ன வெங்காயம் | 180 | 160 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 150 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 200 | 350 | 250 | 280 |
| வெண்டிக்காய் | 140 | 140 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 160 |
| பயற்றங்காய் | 180 | 200 | 160 | 240 |
| லீக்ஸ் | 80 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 70 | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 200 | 220 | 250 | 240 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 800 | 600 |
| போஞ்சி | 140 | 140 | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 150 | 80 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 150 | 150 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 150 | 150 | 160 |
| முள்ளங்கி | 80 | 60 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | 100 | 120 | -- | 100 |

# கிளி.மாவட்ட ஆரம்பக்கல்வி முன்னேற்றமடைந்துள்ளது

(கண்டாவளை)

**இலங்கையின் 20 ஆவது நிலையில் காணப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தின் ஆரம்பக்கல்வி 8 ஆவது நிலைக்கு முன்னேறி இருப்பதாக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டம் மீள் குடியமர்வுக்கு பின்னரான காலப்பகுதியில் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலை காணப்பட்டது. தற்போது பின்னடைவில் காணப்பட்ட கல்வியில் முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகிறது.

குறிப்பாக மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட ஆரம்பக் கல்வி மற்றும் விஞ்ஞான பிரிவு என்பவற்றில் அதிக முன்னேற்றம் கண்டுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் குறிப்பிடுகையில், இலங்கையின் 20 ஆவது இடத்தில் காணப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தின் ஆரம்பக்கல்வி தற்போது 8 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. அதேபோன்று விஞ்ஞானப் பிரிவானது இரண்டாம் நிலைக்கு முன்னேறியுள்ளது. முதலாவது இடத்தில் கொழும்பு மாவட்டமும் இரண்டாவது மாவட்டமாக கிளிநொச்சியும் 3 ஆவது நிலையிலேயே யாழ்ப்பாணமும் காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (5-4-315)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)


உடுவில் பிரதேச செயலகத்தில் கடந்த 10 ஆம் திகதியன்று பொதுமகனொருவரால் தவறவிடப்பட்ட ஒரு தொகைப் பணம் பிரதேச செயலக உத்தியோகத்தரினால் கண்டெடுக்கப்பட்டு பிரதேச செயலக அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த பணத்தினைத் தவறவிட்டவர் அலுவலக நேரத்தில் பிரதேச செயலக கணக்காளரிடம் தொடர்புகொண்டு உரிய ஆதாரத்தினைச் சமர்ப்பித்து தவறவிட்ட பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு உடுவில் பிரதேச செயலாளர் த.முகுந்தன் அறிவித்துள்ளார். (5-4)



சர்வதேச பாவனையாளர் உரிமைகள் தினத்தை முன்னிட்டு எஸ்.எல்.எஸ்.தரச் சான்றிதழ் பொறிக்கப்பட்ட தலைக்கவசத்தின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடு யாழ். மாவட்டச் செயலகப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் திருநெல்வேலி, சாவகச்சேரி பகுதிகளில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்டது. (படம்:சுபேசன்)

## சிறந்த விவசாய செய்கையாளர் கௌரவிப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நடைபெற்ற வயல் விழாவின் போது சிறந்த விவசாய செய்கையாளர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளதுடன் சின்னவெங்காய விதை உற்பத்தியும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் விவசாய பயிற்சி பண்ணையில் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பூ.உகநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் கலாநிதி அரசகேசரி பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், மாவட்ட விவசாய பணிப்பாளர், ஒட்டுசுட்டான் உதவிப் பிரதேச செயலாளர், உள்ளிட்ட அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது சின்ன வெங்காய விதை உற்பத்தி மற்றும் சிவப்பு நெல் அறுவடை, காளான் செய்கை, லீக்ஸ் செய்கை அறுவடையும் இடம்பெற்றுள்ளன.

இதன் போது மாவட்டத்தில் சிறந்த விவசாயச் செய்கையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். (5-4-281)

## நோயாளியை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

கடந்த முதலாம் திகதி மாலை வீதியிலிருந்து 1990 நோயாளர் காவுவண்டியின் உதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் தங்கராசா (வயது-80) என்பவர் அனுமதிக்கப்பட்டார்.

ஆனால் இதுவரை அவரை உறவினர்கள் எவரும் பார்வையிட வரவில்லை.

எனவே குறித்த நோயாளியை அவரது உறவினர்கள் பொறுப்போற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (5-4)

## பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சை தொடர்பான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மேலும் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அனுமதிஅட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் " செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியுடனோ அல்லது 021 221 9939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (5-4)

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமை ஆக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்துப் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்பட உள்ளன.

குறித்த ஏலத்தில் பங்குபற்றுவோர் ஏலவிற்பனை தொடர்பாக 2021.02.19 ஆம் திகதி மற்றும் 2021.03.12 ஆம் திகதிய வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. குறித்த ஏல விற்பனையில் கலந்துகொள்பவர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**நிபந்தனைகள்**

01.ஏலவிற்பனை ஆரம்ப,மாவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் மோட்டார் சைக்கிள்களைப் பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியும்.

02. ஏலவிற்பனையில்பங்குபற்றுபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளித்தல் வேண்டும்.

03. ஏல விற்பனையின் போது மதிப்பிடப்பட்ட விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏல விற்பனைய்ய மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

04. ஏலத்தில் பொருளினை கொள்வனவு செய்பவர் உடனடியாகப் பணத்தினைச் செலுத்தி ஏலப் பொருளினை அப்புறப்படுத்த வேண்டும். கொடுப்பனவுகள் பணமாக மட்டும் செலுத்துதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

05. ஏல விற்பனையின் போது கலந்துகொள்ளும் அனைவரும் தொற்று நோய் பரவுதலைத் தடுக்கும் வகையில் சுகாதார வழிமுறைகளைப் பேணிப் பின்பற்ற வேண்டும் என பருத்தித்துறை நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5-4)

## இந்தியாவின் பரிந்துரை வரவேற்கத்தக்கது- டக்ளஸ்

(கிளிநொச்சி)

இலங்கை தமிழர் தொடர்பாக சர்வதேச தளத்தில் இந்தியாவின் பரிந்துரை வரவேற்கத்தக்கது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பிரமந்தனாறு கிராமத்தில் சமுர்த்தி உற்பத்தி கிராமத் திட்டத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

அந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர், தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வானது இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலிருந்து ஆரம்பிப்பதனூடாகவே சாத்தியப்படுத்த முடியும் என்பதை கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

எமது நிலைப்பாட்டையே ஐக்கிய நாடுகள் எனும் சர்வதேச தளத்தில் இந்தியாவும் இன்று வெளிப்படுத்தியுள்ளது.

எமது அரசியல் நிலைப்பாட்டுக்கு வலுச்சேர்க்கும் இந்தியாவின் இலங்கைத் தமிழரின் அரசியல் தீர்வு தொடர்பான வலுவான நிலைப்பாடாக இருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைவதுடன், அதை வரவேற்கின்றோம் என அவர் தெரிவித்தார். (4)

நான் சிந்திக்கிறேன் ;
எனவேதான் நான் வாழ்கின்றேன்.
– டெக்கார்ட்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கில் சிங்களக் குடியேற்றத்துக்காக நடக்கின்ற நாசகாரம் பாரீர்!

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் மூலமாக அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட ஏராளமான காணிகள் வடபகுதியில் உண்டு.

அதிலும் குறிப்பாக பளை கிளிநொச்சியில் தென்னஞ் செய்கைக்குரிய காணிகள் அரச உடைமையாக்கப்பட்டிருந்தன.

குறித்த அரச காணிகளுக்கான உறுதிகளும் அது தொடர்பான ஆவணங்களும் யாழ்.மாவட்ட காணிப் பதிவகத்தில் பராமரிக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் குறித்த உறுதிகள் அடங்கிய ஆவணங்கள் அதிரடியாக அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு மாற்றப்படுவதற்குள் இருக்கக் கூடிய நாசகாரச் செயல்கள் என்னவென்பது தெரிந்ததே.

அதாவது ஒரு இலட்சம் பேருக்கு அரச காணிகளை வழங்குவது என்ற ஒரு திட்டத்தை அறிமுகம் செய்து, அதற்குப் பொதுமக்கள் விண்ணப்பிக்க முடியும் என அரசாங்கம் அறிவித்திருந்தது.

இவ்வாறு அரச அறிவிப்பு வெளிவந்த போது, வடபகுதி தமிழ் இளைஞர்கள் அதற்கு கணிசமாக விண்ணப்பித்திருந்தனர்.

இத்துணை தூரம் தமிழ் இளைஞர்கள் விண்ணப்பிப்பார்கள் என்று அரசாங்கம் எதிர்பார்த்திருக்கவில்லை.

அவர்களின் நோக்கமெல்லாம் ஒரு இலட்சம் பேருக்கு காணி வழங்குதல் என்ற திட்டத்தின் மூலமாக வடபகுதியில் உள்ள அரச காணிகளை சிங்கள மக்களுக்கு வழங்கி அவர்களை இங்கு குடியேற்றுவதுதான்.

இதனை நிறைவேற்றுவதற்கு வசதியாக யாழ்.மாவட்ட செயலகத்தில் இருந்த அரச காணி உறுதிகள் மற்றும் ஆவணங்கள் அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

வடபகுதியில் காணியில்லாத நிலையில் எத்தனையோ பேர் வீட்டுத் திட்டங்களைப் பெற முடியாமலும் விவசாயம் செய்வதற்குச் சொந்த நிலம் இல்லாமலும் பரிதவிக்கின்றனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், வடபகுதியில் உள்ள அரச காணிகளின் ஆவணங்களை அநுராதபுரத்துக்கு மாற்றுவதென்பது எந்தவகையில் நியாயம் என்பதுதான் நம் கேள்வி.

தவிர, பளையில் உள்ள அரச தென்னங் காணிகளைத் தமக்குத் தருமாறு கோருவதுடன் உரிய சிபார்சுக் கடிதங்களுடன் சிங்களவர்கள் இங்கு வருகின்றனர் எனில்,

அவர்களின் மனநிலையும் அவர்களின் அரச செல்வாக்கும் அவர்களின் பின்னணியும் எத்தகையது என்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும்.

எதுஎவ்வாறாயினும் வடபகுதியில் உள்ள அரச காணிகள் வடபகுதி மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

அதிலும் எந்தப் பிரதேசத்தில் அரச காணிகள் உள்ளதோ அந்தக் காணிகளை அந்தந்தப் பிரதேச மக்களுக்கு வழங்குவதை எங்கள் வடபகுதித் தமிழ் அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்.

இல்லையேல் வடக்கிலும் நாங்கள் குடியிருக்க முடியாத சூழமைவு ஏற்படும்.

# பாடசாலை பாடத்திட்டத்தில் ‘சட்டத்தை’ பாடமாக்க குழு நியமனம்

## சிறிதரன் எம்.பியும் இணைப்பு

(கொழும்பு)

பாடசாலை பாடத்திட்டத்தில் ‘சட்டத்தை’ ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கு பாராளுமன்ற உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோரின் தலைமையில் அண்மையில் கூடிய இரு அமைச்சுக்களும் இணைந்த ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இந்த உபகுழு நியமிக்கப்பட்டது.

கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், சிவஞானம் சிறிதரன், வீரசுமன வீரசிங்ஹ, சாகர காரியவசம், அமரகீர்த்தி அத்து கோரல, டயனா கமகே, (மேஜர்) சுதர்ஷன தெனிப்பிட்டிய உள்ளிட்ட எட்டுப் பேரைக் கொண்ட குழுவே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளது. இதன் செயலாளராக பாராளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி கே. ஜயதிலக செயற்படுவார்.

இங்கு கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர் அலி சப்ரி குறிப்பிடுகையில், சட்டம் தொடர்பில் பொதுமக்களின் அறிவு மிகவும் குறைவான மட்டத்திலேயே காணப்படுவதாகவும், சட்டம் தொடர்பான அடிப்படைப் புரிதலை நாட்டிலுள்ள மாணவர்களுக்கு வழங்குவது மிகவும் முக்கியமானதாகும் என்றார். (ம-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** சந்நிதி கோவில் பிரதேசம், கோகிலாக் கண்டி மங்களா Work shop ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** விநாயகபுரம், பொன்னகர், பூவரசங்குளம், பூவரசங்குளம் அரிசி ஆலை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** குடாகச்சக் கொடிய கிராமம், கூமாங்குளம் கிராமம், அறவந்துலாவ (பாவற்குளம் கிராமம்), இராஜேந்திரகுளம், தரணிகுளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** சிலாவத்துறையிலிருந்து முள்ளிக்குளம் வரை, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படைமுகாம்ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# மன்னாரில் குருதி வழங்க திரண்ட இளைஞர்கள்

## குருதி சேகரிக்கும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தம்

(மன்னார்)

தலைமன்னார் பகுதியில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை மதியம் இடம்பெற்ற புகையிரத விபத்து காரணமாக காயமடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றவர்களுக்கு தேவையான குருதி தட்டுப்பாடு வைத்தியசாலையில் நிலவி வந்தது.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட பொதுவைத்தியசாலை நிர்வாகம் குருதி வழங்க மக்களிடம் கோரிக்கை விடுத்தது.


அதற்கு அமைவாக மன்னாரின் பல பகுதிகளில் இருந்து இளைஞர், யுவதிகள் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு வருகை தந்து குருதி வழங்கினர்.

குறித்த விபத்தில் 25இற்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்த நிலையில் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள்,யுவதிகள் இரத்தம் வழங்குவதற்கு தன்னார்வத்துடன் வருகை தந்து குருதி வழங்கியுள்ளனர்.

எனினும் வைத்தியசாலையின் அவசர கால நிலை காரணமாக குறிப்பிட்ட அளவு குருதியே பெற்றுக்கொள்ளப்பட்டு இரத்தம் சேகரிக்கும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் இன்னும் இரத்த தேவை காணப்படுவதனால் இன்றைய தினமும் மன்னார் பொது வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு குருதி வழங்க முடியும் என தெரிவிக்கப்படுள்ளது. (ம-3,285)

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

பன்னிரு சிவாலயங்களிலும், ராதாகாந்தர் கோயிலிலும், பவதாரிணி காளி சந்நிதியிலும் ஆரதியைத் தரிசித்து ம- மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். ‘ராணி ராசமணி கட்டிய கோயில் இது. இங்கே தினமும் பூஜை நடந்துவருகிறது. அன்றாடம் யாத்திரிகர்களும் பக்தர்களும் இங்கே வந்து பிரசாதம் பெற்றுச் செல்கின்றனர்’ என்று தெரிவித்தார் சிது.

காளி கோயிலிலிருந்து இருவரும் பேசிக்கொண்டே, முற்றத்தைக் கடந்து மீண்டும் ஸ்ரீராமகிருஷ்ணரின் அறை வாசலை அடைந்தனர். அறைக் கதவு மூடியிருந்தது. அப்போது தான் தூபம் போட்டிருந்தார்கள். மேலை நாட்டுப் பழக்கவழக்கங்களைக் கொண்டிருந்த ம- அனுமதியின்றி உள்ளே போக தயங்கினார். வாசலில் வேலைக்காரி பிருந்தா நின்று கொண்டிருந்தாள். அவளிடம், ‘ஏனம்மா, சாது உள்ளே இருக்கிறாரா?’ என்று கேட்டார்.

பிருந்தா: ‘ஆம் உள்ளேதான் இருக்கிறார்.’
ம-: ‘எவ்வளவு நாளாக இங்கே இருக்கிறார்?’
பிருந்தா: ‘ஓ, ரொம்ப நாளாக.’
ம-: ‘நிறைய புத்தகம் படித்திருக்கிறாரா?’

(தொடரும்)

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.03.2021 - 13.04.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## வரவைக் காட்டிலும் செலவு கூடும்



மிதுன இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் பாக்கிய ஸ்தானத்தில் சுக்கிரனோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். எனவே 'புத சுக்கிர யோகம்' செயற்படுகின்றது. அதே நேரத்தில் அஷ்டமத்தில் சனியும் குருவும் இருப்பதால் வரவைக் காட்டிலும் செலவு கூடும். வாய்ப்புகள் வந்தாலும் அதை உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 5, 12 இற்கு அதிபதியான சுக்கிரன், மார்ச் 18 ஆம் திகதி மீன இராசியில் உச்சம் பெறுகின்றார். எனவே தொழில் ஸ்தானம் கொஞ்சம் பலமடைகின்றது. புதிய வாய்ப்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில், பணிமாற்றம் திருப்திகரமாக இருக்கும். இருப்பினும் சிலர், 'விருப்ப ஓய்வில் வெளிவந்து சொந்தத் தொழில் செய்யலாமா?' என்று சிந்திப்பர். தற்போது அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், புதிய தொழில் தொடங்கும் முயற்சி கைகூடுவதில் தாமதம் ஏற்படும்.

### மீன புதன் சஞ்சாரம்

மார்ச் 25 ஆம் திகதி, மீன இராசிக்கு புதன் செல்கின்றார். இது அவ்வளவு நல்லதல்ல. இராசிநாதன் மற்றும் சுக ஸ்தானத்திற்கு அதிபதியான புதன் நீச்சம் பெறுவதால், ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். 'குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒரு வருக்கு மருத்துவச் செலவுகளும் மனக்கலக்கமும் ஏற்படுகின்றதே' என்று கவலைப்படுவீர்கள். எந்த ஒரு காரியமும் மற்றவர்களை நம்பிச் செய்ய இயலாது.

### கும்ப குருவின் சஞ்சாரம்

ஏப்ரல் 5 ஆம் திகதி குரு பகவான், கும்ப இராசிக்கு அதிசாரமாகச் செல்கின்றார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசியையும், 3, 5 ஆகிய இடங்களையும் பார்க்கின்றார். எனவே ஆரோக்கியம் சீராகும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். வழக்குகள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் சிலரது ஒத்துழைப்பு கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். பூர்வீக சொத்துக்களை பங்கிட்டுக் கொள்வதில் இருந்த தடைகள் அகலும். வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள்.

### மேஷத்தில் புதன், சுக்கிரன் சஞ்சாரம்




ஏப்ரல் 10 ஆம் திகதி, மேஷ இராசிக்குப் புதன் செல்கின்றார். அதே போல் ஏப்ரல் 11 ஆம் திகதி மேஷ இராசிக்கு சுக்கிரனும் வருகிறார். இரண்டும் ஒன்று சேரும் பொழுது, 'புத சுக்கிர யோகம்' உருவாகின்றது. உங்கள் இராசிக்கு இலாப ஸ்தானத்தில் இவர்கள் சேருவதால், எதிர்பாராத தன இலாபமும் எண்ணற்ற புதிய வாய்ப்புகளும் கிடைக்கும். தொழில் வளம் சிறப்பாகும். பெண்வழிப் பிரச்சினை முடிவிற்கு வரும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றியாகும்.

### மிதுன செவ்வாய் சஞ்சாரம்

ஏப்ரல் 13 ஆம் திகதி, மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிதியானவர் செவ்வாய். அவர் விரய ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது பூமி விற்பனையால் இலாபம் கிடைக்கும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். சகோதரர்கள், உங்கள் எண்ணங்களைப் பூர்த்தி செய்ய முன்வருவர். மாற்று மருத்துவம் கைகொடுக்கும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குருவை வழிபாடு செய்து வாருங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் இலாபாதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், செலவு கூடும். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், எதையும் பலமுறை யோசித்துச் செய்யுங்கள். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலம் அமைதி காணலாம். தாய்வழி ஆதரவு கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு திடீர் மாற்றங்கள் உருவாகலாம். உங்கள் திறமைக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்காது. அனுமன் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

## நற்பலன்கள் வந்து சேரும்



கடக இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் கண்டகச் சனி நடைபெறுகிறது. எனவே விழிப்புணர்ச்சியோடு செயற்பட வேண்டிய மாதம் இது. குருவின் பார்வை இராசியில் பதிவதால் இடையிடையே நற்பலன்களும் வந்து சேரும். இம்மாதம் கும்பத்தில் குரு வரும்பொழுது அஷ்டமத்து குருவாக அமைவதால் விரயங்கள் கூடும்.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

மார்ச் 18 ஆம் திகதி உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்திற்கு சுக்கிரன் வருகின்றார். மீனத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன் அங்கு உச்சம் பெறுவதால் மாற்றங்களும் ஏற்றங்களும் வந்து சேரும். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். சுக ஸ்தானம், இலாப ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன் உச்சம்பெறும் பொழுது பணப்பற்றாக்குறை அகலும். பல நாட்களாக நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது நடைபெறும்.

### மீன புதன் சஞ்சாரம்

மார்ச் 25 ஆம் திகதி மீன இராசிக்கு புதன் செல்கின்றார். அங்கு அவர் நீச்சம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். விரயாதிபதி நீச்சம் பெறுவது ஒருவழிக்கு நன்மைதான். விரயத்திற்கேற்ற பணம் வந்துகொண்டேயிருக்கும்.

மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்புகள் மாறும். பூர்வீக சொத்துக்களை பங்கிட்டுக் கொள்வதில் இருந்த தடை அகலும். வழக்குகள் சாதகமாகும்.

### கும்ப குருவின் சஞ்சாரம்

ஏப்ரல் 5 ஆம் திகதி குரு பகவான் கும்ப இராசிக்கு அதிசாரமாகச் செல்கின்றார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசிக்கு 2, 4, 12 ஆகிய இடங்களை பார்க்கின்றார். எனவே குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும். தாயின் உடல் நலம் சீராகும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய வாகனங்கள் வாங்கிமகிழும்வாய்ப்பு உண்டு. பயணங்கள் பலன் தருவதாக அமையும். உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு இயங்குவீர்கள். அஷ்டமத்தில் குரு சஞ்சரிப்பதால் இடமாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றம் வரலாம்.

### மேஷத்தில் புதன், சுக்கிரன் சஞ்சாரம்




ஏப்ரல் 10 ஆம் திகதி, மேஷ இராசிக்கு புதன் செல்கின்றார். அதேபோல் ஏப்ரல் 11 ஆம் திகதி மேஷ இராசிக்கு சுக்கிரன் வருகிறார். இரண்டும் ஒன்று சேரும் பொழுது 'புத சுக்கிர யோகம்' உருவாகின்றது. தொழில் வளம் சிறப்பாக இருக்கும். எதிரிகள் விலகுவர். தடைபட்டு வந்த காரியங்கள், துரிதமாக நடைபெறும். தொழில் முன்னேற்றம் கருதி வங்கியில் விண்ணப்பித்திருந்தால் அது கிடைக்கும். பணி நீக்கம் செய்யப்பட்டு வேலை இழந்தவர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்கும்.

### மிதுன செவ்வாய் சஞ்சாரம்

ஏப்ரல் 13 ஆம் திகதி மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 5,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் விரய ஸ்தானத்திற்கு வரும் பொழுது தொழில் மாற்றம், உத்தியோக மாற்றம் ஏற்படலாம். புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். இம்மாதம் பௌர்ணமி அன்று விரதமிருந்து முருகப்பெருமானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் குடும்பச் சுமை கூடும். ஓய்வில்லாமல் உழைத்தாலும் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. பணத் தேவை கடைசி நேரத்தில்தான் பூர்த்தியாகும். கணவன் - மனைவிக்குள் அமைதி நிலவும். உடன்பிறப்புகள் மற்றும் தாயின் ஆதரவு ஓரளவு உண்டு. கண்டகச் சனி நடப்பதால் உடல் நலத்தில் கவனம் தேவை.

பெண்களுக்கு திறமைக்கேற்ற அங்கீகாரம் கிடைப்பது அரிது. அனுமன் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

(தொடரும்)

## பயங்கரவாத...

வுத் திணைக்கள அதிகாரிகள் அவரைக் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கைதான அவர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார். (ம-3)

## நுணாவிலில்...

டிய குறித்த குடும்பப் பெண்ணை அயலவர்கள் மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்த போதிலும் அவரது உயிர் பிரிந்துள்ளது. நுணாவில் வைரவகோவில் பகுதியைச் சேர்ந்த 22 வயதான குடும்பப் பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-3,30)

## பேருந்து - ரயில்...

மன்னார் - தலைமன்னார் ரயில் கடவையில் நேற்று மதியம் 2 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை மாணவர்களை ஏற்றிக் கொண்டு தலைமன்னார் நோக்கி பயணித்த தனியார் பேருந்து கொழும்பில் இருந்து தலைமன்னார் நோக்கி பயணித்த ரயிலுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் காயமடைந்துள்ளதுடன், அவர்களில் சிலர் மன்னார் பொது வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பற்ற ரயில் கடவையை பேருந்து கடக்க முயன்ற நிலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் அதிகமாக பாடசாலை மாணவர்களே காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,285)

## தடுப்பூசி ஏற்றிக்...

ழந்துள்ளார்.

குறித்த ஹோட்டல் ஊழியரின் இரத்த தட்டுகள் வேகமாக குறைவடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனால் ஏற்பட்ட சிக்கல் காரணமாக இந்த மரணம் ஏற்பட்டுள்ளதா என்பதனை உறுதி செய்வதற்காக இரத்த பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக மரணம் தொடர்பில் பிரேத பரிசோதனை நடத்திய காலி கராப்பிட்டிய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஹோட்டல் ஊழியர் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் கொரோனா தடுப்பூசி பெற்றுள்ளார் என சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி பெற்றுக் கொண்ட நாள் முதல் குறித்த ஹோட்டல் ஊழியருக்கு காய்ச்சல், உடல் வலி, தலைவலி, வாந்தி மற்றும் இரத்த தட்டுகள் குறைவடைந்தமை போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வடக்கில் நேற்று...

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் மூவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஒருவர் பருத்தித்துறையைச் சேர்ந்த 9 வயதுடைய பாடசாலை மாணவி என்றும் அவர் ஏற்கெனவே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களுடன் தொடர்பிலிருந்தவர் என்றும் தெரியவந்துள்ளது.

அதேவேளை யாழ்.சிறைச்சாலையிலிருந்து விடுதலையாகி வீடு திரும்பியுள்ள யாழ்.மாநகர எல்லைக்குள் வசிக்கும் ஒருவரும் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மன்னாரிலிருந்து கர்ப்பவதி ஒருவர் நோயாளர் காவு வண்டி மூலம் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18,33)

## மேலும் இருவர்...

வித்தார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 534 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## கிளிநொச்சி...

திரபுரம் சிவன் கோவில் பகுதியில் புத்தர் சிலை இருப்பதாக கூறி எதிர்வரும் மார்ச் 23ஆம் திகதி அவ்விடத்தில் தொல்லியல் அகழ்வுப் பணிகள் இடம்பெறவுள்ளன.

இதனை முன்னிட்டு நேற்றைய தினம் காலை தொடங்கி மாலை வரை அங்கு தொல்லியல் திணைக்களத்தினால் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேசிய மரபுரிமைகள், கலை கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க எதிர்வரும் 23ஆம் திகதி இவ் அகழ்வுப் பணிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ம-3,100,104)

## யாழில் இன்று...

தாயகமான வடக்கு- கிழக்கில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டங்களிற்கு வலுச்சேர்க்கும் முகமாக நல்லூரில் இன்று மாபெரும் கவனயீர்ப்புப் பேரணி இடம்பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவிலிருந்து இப் போராட்டம் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## சைக்கிளிலிருந்து...

இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த யுவதி நேற்று முன்தினம் காலை நாவாந்துறையிலுள்ள உறவினர் வீட்டுக்கு குடிபுகுதல் நிகழ்வு ஒன்றுக்கு வந்துள்ளார்.

மீண்டும் மாலை வீட்டுக்கு செல்வதற்காக சிறுவன் ஒருவனுடன் துவிச்சக்கர வண்டியில் பின்னிருந்து வந்தபோது பச்சைப்பள்ளி பகுதியில் துவிச்சக்கரவண்டியில் இருந்து கீழேவிழுந்து தலையில் படுகாயமடைந்திருந்தார்.

எனினும் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும் அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த குறித்த யுவதிக்கு அண்மையில் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## ஐ.நாவில்...

இந்த யோசனையின் இறுதிவரைவு ஏற்கெனவே இலங்கை அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் அதனை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது. யோசனைக்கு ஆதரவளித்துள்ள நாடுகள் இணை அனுசரணையாளர்களாகவும் ஆதரவு நாடுகளாகவும் செயற்படவுள்ளன.

இந்தநிலையில் எதிர்வரும் 22ஆம் திகதி இலங்கைக்கு எதிரான யோசனை வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-3)

## குடும்...

உரும்பிராய் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான இராசையா மகேந்திரன் (வயது-47) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## வடக்கு - கிழக்...

விக்னேஸ்வரன் "தமிழர் தாயகத்தை இழத்தல்: தமிழர் நிலத்தை பாதுகாப்பதற்கான உபாயங்களை வகுத்தலும் பிரச்சினைகளை இனம் காணுதலும்" என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளார்.

எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை சூம் தொழில்நுட்பம் மூலம் இம்மாநாடு நடைபெறும்.

இந்த மாநாட்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஆர்.சம்பந்தன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு நீதியரசர் விக்னேஸ்வரனுடன் இணைந்து இம் மாநாட்டை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த மாநாட்டில் ஐ. நா மனித உரிமைகள் சபை முன்னாள் உயர்ஸ்தானிகரும் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதியரசருமான திருமதி நவநீதம்பிள்ளை, பிரித்தானியாவின் சர்வதேச புகழ்பெற்ற முன்னணி வழக்குரைஞரும் பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயரின் பாரியாருமான செரி பிளேயர் மற்றும் கனடாவின் சிறப்புமிக்கோர் பட்டியலில் இடம்பெற்றுள்ளவரும் 2010 ஆம் ஆண்டு மனித உரிமைகள் செயற்பாடுகளுக்காக நோபல் பரிசுக்கு முன்மொழியப்பட்டவருமான சர்வதேச மனித உரிமைகள் வழக்குரைஞர் டேவிட் மாடஸ் ஆகியோரும் இந்த மாநாட்டில் முதன்மை உரை ஆற்றுகின்றார்கள். (ம-3)


மெகா பவர்
திகதி 16/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0791
F 5 13 20 75 76

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/03/16
சீட்டிழுப்பு இலக்கம் 1583
சுப்பர் இலக்கம் 02
வெற்றி இலக்கங்கள் 20 26 47 55

மஹஜன சம்பத
திகதி 2021/03/16
சீட்டிழுப்பு இலக்கம் 4428
K 1 5 0 7 6 2

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 16.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2723
B 37 44 55 64

தன நிதானய
திகதி - 2021.03.16
சீட்டிழுப்பு இலக்கம் - 465
O 16 33 36 47

அத கோடிபதி
கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1224
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 16.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 118,259,135
வெற்றி இலக்கங்கள் 12 41 45 54 I

சனிதா
சீட்டிழுப்பு இல: 3554
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 16.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,808,827
வெற்றி இலக்கங்கள் 32 48 50 74 A

ராசி
சுப்பர் ஜக்பொட் 3,555,971/=
திகதி: 16.03.2021
வெற்றி வாரம்: 3105
வர்ணம்: சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 22 29 31 62 கன்னி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,160,800

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1398 நிறம் இளநீலம்
சீட்டிழுப்பு திகதி 16/03/2021 தினம் செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட 74,600,431/=
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் B 42 49 67 70

சீட்டிழுப்பு வாரம் 703
16.03.2021 செவ்வாய்க்கிழமை
M 20 42 71 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,706,340
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## SPOKEN ENGLISH SELF LEARNING RESOURCE

அன்றாடம் பயன்படக் கூடிய ஆங்கில உரையாடல்கள் வீடியோ காணொளி வடிவில் எம்மிடம் பெற்றுக்கொள்ள முடியும்.
50க்கும் அதிகமான சந்தர்ப்பங்கள்.
30 மணி நேர காணொளிகள்.
ஆங்கில சொல்லறிமுகம்.
8 GB புதிய Pen Drive இல் பதிவேற்றம்.
Desktop, Laptop மற்றும் Flat TV யில் பயன்படுத்தலாம்.
மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரை பயன்படுத்தி ஆங்கில பேச்சாற்றலை விருத்தி செய்யலாம்.
விலை 1900/- (புதிய Pen Drive + Delivery)

**Call : 075 601 1709** (6141)

## 31ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
**அருணாசலம் சிவதாசன்**

அருணுக்கும் முத்துக்கும்
சிவமாக அவதரித்து அரைதான் (1/2)
நூற்றாண்டு அகலமுன்பு அணைந்தனையோ...

நண்பர் குழாம்
வினோபா நூலகம் , வினோபா நகர், கச்சாய். (C-1724)

## பணிநிலை வெற்றிடம்

வட மாகாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சர்வதேச நிறுவனமொன்றுக்கு O/L, A/L பயின்ற 25 பேர் இணைக்கப்பட உள்ளனர்.
முன் அனுபவம் அவசியமற்றது.
வயது : 18 - 28 வரை, தங்குமிட வசதி உண்டு. (6187)

**☎- 077 157 1699**

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (6186)

## A/L - வரலாறு (2023)

வடக்கின் முதல்நிலை A/L வரலாற்று ஆசிரியர்
**M. பத்மன்**
B.A.(Hons),P.G.D.E,M.A(Hons) History

கற்பிக்கும் இடங்கள் DMI யாழ்ப்பாணம், BITSMANS மானிப்பாய், உயர்கலைக் கல்லூரி குளப்பிட்டி.
A/L 2022 அனுமதிகளும் வழங்கப்படும்.
**ஆரம்பம் :- 20.03.2021** (6173)

## மாடி வீடு வாடகைக்கு

அரச மற்றும் தனியார் அலுவலகம், மெடிக்கல் கிளினிக், Higher education, Project office போன்றவற்றிக்கு பொருத்தமான புதிதாக கட்டப்பட்ட மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு.
சாவகச்சேரி Ladies College இற்கு அருகாமையில் Ground floor/ First floor மாபிள் பதிக்கப்பட்ட 3000 சதுர அடி விசால முள்ள வீடு, 2 விசாலமான வரவேற்பறை, 6 அறைகள், 3 நவீன குளியலறைகள், 2 அடுப்புகள் பொருத்தப்பட்ட சமையலறைகள் உண்டு. தனியான பாதை, வாகன தரிப்பிட வசதிகள் உண்டு.

**தொடர்பு:- 077 350 7694.**
**Whatsapp +44 740 170 8819** (6141)

## வாடகைக்குண்டு

யாழ்.திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் பலாலி வீதியை முன்பக்கமாக கொண்ட கட்டடத்தில் 1 அறை, 2 அறைகள் கொண்ட தளபாடமிட்ட வீடுகள் மற்றும் அறைகள் வாடகைக்கு உண்டு. (6188)

**077 105 6694**

## புதிய வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொழும்புத் துறையில், 3 அறைகளுடன்கூடிய புதிய வீடு விற்பனைக்கு உண்டு.
(தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.) (6174)

**☎-077 444 9119**

## பராமரிப்பாளர் தேவை

யாழ். திருநெல்வேலியிலுள்ள எமது வியாபாரக் கட்டடமொன்றிற்கு பராமரிப்பாளர் ஒருவர் தேவை. எமது கட்டடத்திற்கு அண்மையில் வசிப்பதுடன் 30 - 50 இற்கும் இடையேயான வயதுடைய வயரிங், பிளம்பிங் வேலை ஓரளவு தெரிந்த ஒருவர் தேவை. (6188)

**☎-075 099 9243**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**
**UK-1000/=Kg**
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் **1150/=Kg**

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

**0768226240** DHL

## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
**BARATHY**
சித்தன்கேணி
எமது மூன்று நிறுவனங்களிலும்

**A/L 2023**
கலை, வர்த்தகப் பிரிவு
மார்ச் 28 இல் (ஞாயிறு)

முன்கூட்டியே உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

யாழ். நகரில்
காலை 8.00 - 12.00 வரை

சுன்னாகத்தில்
மாலை 3.30 - 5.30 வரை

சித்தன்கேணி
மாலை 3.30 - 5.30 வரை

உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
மேலதிக விபரங்களுக்கு
**077 376 3511** (C-1722)

## G.C.E. (Ordinary Level) Examination
## APPRECIATION OF ENGLISH LITERARY TEXTS
## ENGLISH LITERATURE

**IELTS** OUR TARGET IS BAND : 09
ACADEMIC
GENERAL
LIFE SKILLS - A1/ B1

* வகுப்புக்கள் BRITISH COUNCIL லில் பயிற்சி பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளரினால் நடாத்தப்படுகின்றன.
* நாங்கள் IELTS - Registration Centre for British Council

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

**BRITISH COLLEGE OF ENGLISH**
Palay Road, Urumpirai. (உரும்பிராய் பெற்றோல் செற்றிற்கு முன்னால்)
Tel: 021 222 0384, 077 880 3887 (C-1676)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 1 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**077 436 6704, 077 179 1963** (C-1723)

## அண்ணா

EXPRESS
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388 (C-1637)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு |

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

# NEW SCIENCE HALL

**KANNATHIDDY** **JAFFNA**

## 2023 A/L நேரடி வகுப்பு

# CHEMISTRY

## திரு. S. T. உமாசங்கர்
(கொழும்பு முன்னணி ஆசிரியர்)

**ஆரம்பம் - 17.03.2021** WEDNESDAY - 11.30 a.m (C-1718)

## BOC TRAVELS (Pvt)Ltd.
Hospital Road, Jaffna.

இலங்கை வங்கியின் துணை நிறுவனமான BOC Travels நிறுவனத்தில் Air Ticketing, Travel Insurance உடன் இணைந்த ஏனைய சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம். (C-1713)

**021 222 4575/76,**
**070 384 9335, 070 395 1794**

## இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற
**இரத்தினசாமி** அவர்கள்
ஜாதகம், கைரேகை, எண்கணிதம்
திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில் தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்பு கொள்ளவும்.

முன்பதிவுக்கு: **076 682 7368**
கச்சேரியடி, யாழ்ப்பாணம் (C-1714)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.